Registered as a News Paper

பக்கங்கள் 06

விலை ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | ஐப்பசி 07 | (23 - 10 - 1992) | வெள்ளிக்கிழமை | ஓசை 248

## யாழ். அகதி முகாம்களில் முப்பதாயிரம் குடும்பங்கள்

சமீபகால இராணுவ நடவடிக்கைகளினால் யாழ். குடா நாட்டில் சுமார் அறுபத்தாறாயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்து இருப்பதாகவும், இதில் சுமார் முப்பதாயிரம் குடும்பங்கள் அகதி முகாம்களில் தங்கி இருப்பதாகவும் தெரியவந்துள்ளது. இந்நடவடிக்கைகளினால் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மட்டும் தொழில் ரீதியாக சுமார் பன்னிரண்டாயிரம் மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இப்பிரிவில் நூற்றி எழுபத்தி எட்டு பேர் அங்கவீனரான நிலையில் இருப்பதாகவும் அறிய வருகின்றது. வடமராட்சி பகுதியில் (6 ஆம் பக்கம்பார்க்க)

### புல்மோட்டையில்

# புலிகள் அதிரடி தாக்கு; 10 படையினர் பலி

## பல ராணுவத்தினர் படுகாயம்

(திருமலை)

புல்மோட்டையில் நேற்றுக்காலை சிறிலங்கா இராணுவ ரோந்து அணி ஒன்றின்மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர்த்தாக்குதல் ஒன்றில்பத்திற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர்படுகாயமடைந்தனர். பல ஆயுதங்களும், வெடிபொருள்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. புலிகள் தரப்பில் ஒருவர் வீரச்சாவடைந்தார்.

நேற்றுக்காலை 8 30 மணியளவில் புல்மோட்டை இராணுவ முகாமில் இருந்து 'டபிள் மலை' இராணுவ முகாமிற்கு ரோந்து சென்ற சுமார் 20 பேர் கொண்ட இராணுவ அணியே புலிகளின் திடீர் தாக்குதலுக்கு உள்ளாகியது இத்தாக்குதல் புல்மோட்டை இராணுவ முகாமிலிருந்து சுமார் 200 யார் தொலைவில் வைத்து புலிகளால் நடத்தப்பட்டது.

இத் தாக்குதலின் போது பத்து இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர் பலர் காயமடைந்த நிலையில் முகாமிற்கு ஓடிவிட்டனர் இத்தாக்குதலை ஊர்ஜிதம் செய்த கூட்டுப்படைகளின் நடவடிக்கைத் தலைமையகப் பேச்சாளரான கேணல் சரத்முனசிங்க பத்து இராணுவத்தினர் பலியானதாகவும், ஐந்து பேர் காயம் அடைந்ததாகவும் தெரிவித்தார்.


ரோந்து அணிமீது தாக்குதல் இடம் பெற்ற வேளையில் 'டபிள் மலை' முகாமிலிருந்து அவசர வாகனங்கள் சகிதம் உதவிக்கு விரைந்த இராணுவத்தினர் மீதும் விடுதலைப் புலிகளால் தாக்குதல் நடத்தப்பட்டது. ஆனால் இதில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிபரங்கள் கிடைக்கவில்லை.

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

திருக்கோணமலை மாவட்டம் புல்மோட்டையில் விடுதலைப்புலிகள் நேற்று மேற்கொண்ட திடீர் தாக்குதலில் ஒரு ஏ கே. எல் எம் ஜி. உட்பட ஆயுதங்களும் இராணுவப் பொருள்களும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன. அவற்றின் விபரம் வருமாறு:

- ★ ஏ கே. எல். எம். ஜி — 01
- ★ ரி 56 - 2 ரக துப்பாக்கி — 06
- ★ ரி 81 மகசின் — 04
- ★ நடுத்தர ரவைகள் — 1270
- ★ ஏ. கே. கோல்சர் — 09
- ★ சப்பாத்து (சோடி) — 10
- ★ கிட்பாக் — 01
- ★ மில்றி பெல்ட் — 06
- ★ சாதாரண பெல்ட் — 02
- ★ தலைக்கவசம் — 07

### வீரச்சாவு



வீ. வேங்கை கலைச்செல்வன்

திருக்கோணமலை புல்மோட்டை பகுதியில் நேற்று விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட திடீர் தாக்குதலின் போது விடுதலைப்புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார் வீரச்சாவு அடைந்த வீரவேங்கை கலைச்செல்வன் (கணபதிப்பிள்ளை தமிழ்வேந்தன், 5ஆம் வட்டாரம் சம்பூர் மூதூர்) எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## வெல்லாவெளியில் மூன்று வேங்கைகள் வீரச்சாவு

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளியில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருடனான திடீர் மோதலில் மூன்று விடுதலைப் புலிகள் வீரச்சாவு அடைந்தனர்.

வீரச்சாவு அடைந்த 2 ஆம் லெப்டினன்ட் தாமரை (சந்தப்பர் சிவபாதம் - கோயில் போரைதீவு, மட்டக்களப்பு) வீரவேங்கை அழகேஸ் (முத்

### ஆனையிறவில்

# புலிகள் - ராணுவம் உக்கிரமான சண்டை

## படைக்கு பலத்த இழப்பு பல காவலரண்கள் அழிப்பு

[நமது நிருபர்]

ஆனையிறவு உப்பளப் பகுதியில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவத்தினரின் தொடர் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதியில் உக்கிர சண்டை மூண்டது. சுமார் ஒன்றரை மணிநேரம் நீடித்த சண்டையில் இராணுவத் தரப்பிற்கு பலத்த சேதங்கள் ஏற்பட்டன. பல காவலரண்கள் தாக்கி அழிக்கப்பட்டன. புலிகள் தரப்பில் பதினைந்து போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

நேற்று அதிகாலை 1-40 மணியளவில் விடுதலைப் புலிகள் தொடுத்த தாக்குதலைத் தொடர்ந்தே இவ் உக்கிரச் சண்டை மூண்டது ஒன்றரை மணிநேரமாக நடைபெற்ற இவ் உக்கிரச் சண்டையின் போது பிரதான இராணுவ முகாம் மீது ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இத்தாக்குதலில் இராணுவத்தினருக்கு பலத்த சேதம் ஏற்பட்டதாயினும் இராணுவத்திற்கு ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பான விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை.

இதேவேளை இத்தாக்குதலின் போது பல காவலரண்கள்புலிகளால்தாக்கி அழிக்கப்பட்டதோடு சிறு தொகுதி வெடிப் பொருள்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இவ்வாறு கைப்பற்றப்பட்ட பொருள்களின் விபரம் வருமாறு:

- ★ ஐ. எம் ரவைகள் 700
- ★ நேட்டோ ரவைகள் 86
- ★ 5.56 ரவைகள் 46
- ★ ரி 81 ரைபில் கிரனெட் 2
- ★ ரம் மகசீன் 2
- ★ ஹெல்மட் 4

## 15 வேங்கைகள் வீரச்சாவு

ஆனையிறவு உப்பளம் பகுதியில் அமைந்திருந்த தொடர் காவலரண்கள் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள்

2-ம் லெப்டினன்ட் மதனராசா (மதன்ராஜ்) நல்லதம்பி ஜெயரூபன் - நானாட்டான், மன்னார்.

அரியாலை.

வீரவேங்கை காங்கேயன் (தர்சன்) பாலசிங்கம் விமலன்- மீசாலை, சாவகச்சேரி

னுவ முகாமில் இருந்து 'டபிள் மலை' இராணுவ முகாமிற்கு ரோந்து சென்ற சுமார் 20 பேர் கொண்ட இராணுவ அணியே புலிகளின் திடீர் தாக்குதலுக்கு உள்ளாகியது இத்தாக்குதல் புல்மோட்டை இராணுவ முகாமிலிருந்து சுமார் 200 யார் தொலைவில் வைத்து புலிகளால் நடத்தப் பட்டது.

ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்' பலர் காயமடைந்த நிலையில் முகாமிற்கு ஓடிவிட்டனர் இத்தாக்குதலை ஊர்ஜிதம் செய்த கூட்டுப்படைகளின் நடவடிக்கைத் தலைமையகப் பேச்சாளரான கேணல் சரத்முனசிங்க பத்து இராணுவத்தினர் பலியானதாகவும், ஐந்து பேர் காயம் அடைந்ததாகவும் தெரிவித்

தல் இடம் பெற்ற வேளையில் 'டபிள் மலை' முகாமிலிருந்து கவச வாகனங்கள் சகிதம் உதவிக்கு விரைந்த இராணுவத்தினர் மீதும் விடுதலைப் புலிகளால் தாக்குதல் நடத்தப்பட்டது. ஆனால் இதில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிபரங்கள் கிடைக்கவில்லை.

# கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

திருக்கோணமலை மாவட்டம் புல்மோட்டையில் விடுதலைப்புலிகள் நேற்று மேற்கொண்ட திடீர் தாக்குதலில் ஒரு ஏ கே. எல் எம் ஜி. உட்பட ஆயுதங்களும் இராணுவப் பொருள்களும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன. அவற்றின் விபரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| ★ | ஏ. கே. எல். எம். ஜி | — 01 |
| ★ | ரி 56 - 2 ரக துப்பாக்கி | — 06 |
| ★ | ரி 56 பட்மொடல் துப்பாக்கி | — 02 |
| ★ | ரி 81 - 1 ரக துப்பாக்கி | — 01 |
| ★ | ஏ. கே. எல். எம். ஜி. ரம் மகசின் | — 05 |
| ★ | ஏ. கே. எல். எம் ஜி லிங் | — 485 |
| ★ | ரி 56 மகசின் | — 28 |
| ★ | ரி 81 மகசின் | — 04 |
| ★ | நடுத்தர ரவைகள் | — 1270 |
| ★ | ஏ. கே. கோல்சர் | — 09 |
| ★ | சப்பாத்து (சோடி) | — 10 |
| ★ | கிட்பாக் | — 01 |
| ★ | மில்றி பெல்ட் | — 06 |
| ★ | சாதாரண பெல்ட் | — 02 |
| ★ | தலைக்கவசம் | — 07 |
| ★ | மைன்ஸ் கிண்டி | — 06 |
| ★ | கத்தி | — 02 |
| ★ | மழை அங்கி | — 02 |
| ★ | தொப்பி | — 02 |

# புலிகளுடன் அரசாங்கம் இரகசியமாகப் பேசக் கூடாது

## -அநுரா பண்டாரநாயக்கா

(சென்னை)

இராணுவத் தந்திரோபாயங்கள் குழப்பமானவையாக உள்ளன. அரசாங்கத்திற்குள் ஒரு பொதுவான பிளவு இருப்பது போல தோன்றுகின்றது. விடுதலைப் புலிகள் இப்போதும் பலம் பொருந்தியவர்களாகக் காணப்படுகின்றனர் என சிறிலங்கா சுதந்திரக் கட்சி தேசிய அமைப்பாளர் அநுரா பண்டாரநாயக்கா சென்னையில் இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் குறிப்பிட்டார்.

அரசாங்கத்திற்கு எதிராக எதிர்க் கட்சிகளின் இயக்கம் பற்றித் தெரிவிக்கும் போது இந்த நடவடிக்கைகள் பெருமளவு வெற்றிகரமானவையாக இருந்துள்ளன. அரசாங்கத்தின் மீது நெருக்குதல்களை மேற்கொள்வதாக கூட்டுத் தந்திரோபாயங்கள் எதிர் காலத்திலும் மேற்கொள்ளப் படும் என்று குறிப்பிட்டார்

கடந்த காலத்தில் இலங்கை அரசாங்கத்திற்கும்விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவடைந்திருந்தாலும் இப்போது பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதில் புலிகள் அக்கறையாகவும் உண்மையாகவும் இருந்தால் அரசாங்

(6ஆம் பக்கம் பார்க்க)

# அழிவு என்பதன் அர்த்தம் அங்கேதான் உள்ளது

## - மாதகலிலிருந்து விடுவிக்கப்பட்டவர்

(யாழ்ப்பாணம்)

''அழிவு'' என்பதற்கு அர்த்தம் அங்கே தான் உள்ளது. பொதுமக்களின் குடியிருப்பில் உள்ள பெறுமதிமிக்க சொத்துக்கள் அனைத்தும் சூறையாடப்பட்டது மட்டுமல்லாமல் பொதுமக்கள் குடியிருந்த வீடுகள் அனைத்தும் தினம்தினம் குண்டு வைத்து தகர்க்கப் பட்டு வருகிறது'' இவ்வாறு மாதகல், இளவாலை ஆகிய இராணுவத்தின் பிடியில் சிக்கியிருக்கும் பகுதியில் இருந்து நேற்று விடுவிக்கப்பட்ட மாணவர்களில் ஒருவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்; மேற்படி பகுதிகளில் உள்ள பொதுமக்களின் வீடுகளில்உள்ள உடுபுடைவைகள் உட்பட அனைத்துப் பெறுமதி மிக்க சொத்துக்களும் இராணுவத்தினரால் சூறையாடப்பட்டிருக்கிறது. சூறையாடப்பட்ட பொருள்

(6ஆம் பக்கம் பார்க்க)

# மாதகலில் படையிடம் சிக்கிய இரு மாணவர் விடுவிப்பு

(வடமராட்சி)

மாதகல் பகுதியில் சிறிலங்கா இராணுவ சுற்றிவளைப்பின்போது இராணுவ பிடிக்குள் சிக்கியவர்களில் இரு இளைஞர்கள் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

கடந்த ஆகஸ்ட் மாதம் இளவாலை, மாதகல் பகுதிகளை சிறிலங்கா இராணுவம் சுற்றி வளைத்தபோது பல பொதுமக்கள் இராணுவப்பிடிக்குள் சிக்கியது தெரிந்ததே. இவ்வாறு தடுத்து வைக்கப் பட்டிருந்தோரில் மாதகலைச் சேர்ந்த அ. இமானுவேல் (இளவாலை என்றியரசர் கல்

(6ஆம் பக்கம் பார்க்க)

போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## வெல்லாவெளியில் மூன்று வேங்கைகள் வீரச்சாவு

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளியில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருடனான திடீர் மோதலில் மூன்று விடுதலைப் புலிகள் வீரச்சாவு அடைந்தனர்.

வீரச்சாவு அடைந்த 2 ஆம் லெப்டினன்ட் தாமரை (சந்தப்பர் சிவபாதம் - கோயில் போரைதீவு, மட்டக்களப்பு) வீரவேங்கை அழகேஸ் (முத்தையா லோகேஸ்வரன்- நுணுகல, பதுளை), வீரவேங்கை ஜீவராஜ் (தினேஸ் கந்தசாமி சிவநாயகம்-கிரான்குளம் மட்டக்களப்பு) ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## மீட்பு நிதி சேகரிப்பு

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச்சேர்ந்தவர்களுக்கான மீட்பு நிதி சேகரிப்பு நாளை முற்பகல் 9-00 மணி தொடக்கம் 12-00 மணி வரைபருத்தித்துறைவட இந்து மகளிர் கல்லூரியிலும் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான மீட்பு நிதி சேகரிப்பு பிற்பகல் 2-00 மணி தொடக்கம் 5-00 மணி வரை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் இடம் பெறும்எனதமிழீழ விடுதலைப் புலிகள் நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்

## அனுமதி அட்டைகளை பெறவும்

க. பொ. த. (சா/த) முன்னோடிப் பரீட்சை - 1992 அனுமதி அட்டைகள் கோட்டக கல்வி அலுவலகங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளன

இவற்றை அவ்வக் கோட்டக் கல்வி அலுவலகங்களிலிருந்து சேகரித்து பரீட்சார்த்திகளுக்கு விநியோகிக்கும் வண்ணம் பாடசாலை அதிபர்கள் வேண்டப்படுகின்றனர்.

## நேற்று முதல் ஒய்வூதியம்

புலோலி, பருத்தித்துறை பலநோக்குகூட்டுறவு சங்க கிராமிய வங்கிகளில் ஒய்வூதியம் பெறும் ஒய்வூதியர்களுக்கு ஒக்டோபர் மாத ஒய்வூதியம் பணமாக நேற்று முதல் வழங்கப்பட்டு வருகிறது.

ரண்கள் தாக்கி அழிக்கப்பட்டன புலிகள் தரப்பில் பதினைந்து போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

நேற்று அதிகாலை 1-40 மணியளவில் விடுதலைப் புலிகள் தொடுத்த தாக்குதலைத் தொடர்ந்தே இவ் உக்கிரச் சண்டை மூண்டது ஒன்றரை மணிநேரமாக நடைபெற்ற இவ் உக்கிரச் சண்டையின் போது பிரதான இராணுவ முகாம் மீது ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இத்தாக்குதலில் இராணுவத்தினருக்கு பலத்த சேதம் ஏற்பட்டதாயினும் இராணுவத்திற்கு ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பான விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை.

இதேவேளை இத்தாக்குதலின் போது பல காவலரண்கள்புலிகளால்தாக்கி அழிக்கப்பட்டதோடு சில தொகுதி வெடிப் பொருள்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இவ்வாறு கைப்பற்றப் பட்ட பொருள்களின் விபரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| ★ | ஐ. எம் ரவைகள் | 700 |
| ★ | நேட்டோ ரவைகள் | 86 |
| ★ | 5.56 ரவைகள் | 46 |
| ★ | ரி 81 ரைபில் கிரனெட் | 2 |
| ★ | ரம் மகசீன் | [illegible] |
| ★ | ஹெல்மட் | 4 |

# 15 வேங்கைகள் வீரச்சாவு

ஆனையிறவு உப்பளம் பகுதியில் அமைந்திருந்த தொடர் காவலரண்கள் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில், 15 போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

கப்டன் பாணன் (வினோத்) ஆனந்தராசா குகராசா - திருநகர், கிளிநொச்சி.

லெப்டினன்ட் இன்பன் அரியநாயகம் ரதன் - இறம்பைக் குளம், வவுனியா

லெப்டினன்ட் இசைவாணன் (மீரான்) பொன்னுத்துரை குணரட்ணம் - நீதிபுரம் மாங்குளம்.

2-ம் லெப்டினன்ட் மதனராசா (மதன்ராஜ்) நல்லதம்பி ஜெயரூபன் - நானாட்டான், மன்னார்.

2-ம் லெப்டினன்ட் வேங்கை வல்லிபுரம் விவேகானந்தன்- ஓமந்தை வவுனியா.

2-ம் லெப்டினன்ட் பிரதீபன் (ரங்கன்)சிவராசலிங்கம் பத்மசிறி- கண்டிவீதி, கிளிநொச்சி.

2-ம் லெப்டினன்ட் குட்டிக் கண்ணா - கணபதிப் பிள்ளை சிவகுமார் வேப்பங்குளம் வவுனியா.

2-ம் லெப்டினன்ட் தமிழரசன் சத்தியானந்தன் சிவகுமாரன்- இலந்தை குள வீதி, அரியாலை.

வீரவேங்கை காங்கேயன் (தர்சன்) பாலசிங்கம் விமலன்- மீசாலை, சாவகச்சேரி

வீரவேங்கை தேவன் ஸ்டெனிஸ்லாஸ் சிவகரன்- உடையார்கட்டு, சுதந்திரபுரம் புதுக்குடியிருப்பு

வீரவேங்கை மாணிக்கவாசன் கணபதிப்பிள்ளை லோகநாதன்-தேவிபுரம்,புதுக்குடியிருப்பு.

வீரவேங்கை முருகன் (விக்னேஸ்) கணேஸ் வின்சன்- மட்டக்களப்பு.

வீரவேங்கை மலரவன்

(6ஆம் பக்கம் பார்க்க)

# மங்கள முனசிங்க திட்டம்; தமிழ் குழுக்கள் நிராகரிப்பு

[கொழும்பு]

பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவரான மங்களமுனசிங்க இனப்பிரச்சினைக்கு முன்வைத்த யோசனையை ஏழு தமிழ்க்கட்சிகளும் ஏகமனதாக நிராகரித்துள்ளதாக கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிராகரிப்புத் தொடர்பான விபரங்களை தமிழ்க்கட்சிகள் தெரிவுக் குழுத் தலைவர் மங்களமுனசிங்காவுக்கு நேற்று முன்தினம் தெரிவித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இ. தொ. கா. தலைவர் எஸ். தொண்டமானை ஏழு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் நேற்று முன்தினம் சந்தித்து இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினர் என கொழும்புப் பத்திரிகை ஒன்றுகுறிப்பிட்டுள்ளது.

பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவரான மங்கள முனசிங்கவினால் முன் வைக்கப்பட்டுள்ள தீர்வு யோசனைகளை தாங்கள் நிராகரித்து விட்டதாக தொண்டமானிடம் அவர்கள் தெரிவித்து,மேற் கொண்டு தாங்கள் மேற்கொள்ளவிருக்கும் செயல் திட்டங்கள் குறித்து பேசினார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# கொழும்பில் பதற்றநிலை; கடைகளை மூட வற்புறுத்து

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸால்இன்று'கறுப்பு வெள்ளி' பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதையடுத்து கொழும்பில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மருதானைப் பகுதியில் உள்ள எல்லா கடைகளும் இன்று மூடப்பட வேண்டும் என சிலர் நேற்று சென்று வற்புறுத்தியதாகவும் அல்லது ஒரு போதும் திறக்கமுடியாத நிலைமை ஏற்படும் என எச்சரிக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்''கறுப்பு வெள்ளியை'' பயன்படுத்தி கலவரங்களைத் தூண்டிவிட முயற்சிப்பதாக

(6ஆம் பக்கம் பார்க்க)

**காருதனை வளர்த்திடுவோம்
தூருதனை தணித்திடுவோம்**

## வரி விளம்பரம்


**உடன் விற்பனைக்கு உண்டு**

HY - LINE P^IMA BHIRA கைலைன்வெள்ளை, கறுப்பு பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகளுக்கும் உடன் தொடர்பு ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (3503)

**''சுவடுகள்''**

மீரா வெளியீடு இயல்வாணன் எழுதியஇந்த நாவலில்... ''மௌனங்களைப் பிளந்து ஒரு வார்த்தை வெடிக்கிறது. இருளைக் கிழித்து ஒரு விடியல் பிறக்கிறது! சூரியனைத் தேடி ஒரு சுதந்திரப் பூ பலர்கிறது.'' (3502)

**இனிய நினைவுக்கு ஒரு மரம்**

இனிய நிகழ்வுகளையும் இனியவர்களையும் நினைவு கூரப் பயன்தருமரம் நடுங்கள். 25 மில்க்வைற் நீல சோப் அல்லது சலவைத்தூள் வெற்றுப்பக்கற் தந்து மரக்கன்று பெறுங்கள். -மில்க்வைற் (சி- 5264)

**மலிவு விற்பனை**

தீபாவளித் திருநாளை முன்னிட்டு றெடிமேற் ஸ்கேட்' பிளவுஸ்,சிங்கப்பூர் சவுண்கள், சூட்டிங் சேட்டிங் வகைகள் இன்று தொடக்கம் 25-10-92 வரை மலிவு விலையில் கிடைக்கும், தவற விடாதீர்கள். துர்க்கா ரெக்ஸ் 164, நவீன சந்தை உட்புறம் யழ்ப்பாணம். (சி-5251)

**ஜெயா அழகு சாதன மாளிகை**

எவர் சில்வர், பிளாஸ்ரிக், தையல் உபகரணங்கள் பன்சிகூட்ஸ் பொருள்கள். மொத்த சில்லறை விற்பனை நிலையம். ஜெயா அழகு சாதன மாளிகை 177 மின்சார நிலைய வீதி 160, நவீன சந்தை உட்புறம் யாழ்ப்பாணம். (சி-5250)

**சோதிடம்**

ஜாதகம் எழுத, விவாகப் பொருத்தம்பார்க்க,அதிர்ஷ்ட எண்களில் பெயரமைக்க, உங்கள் எதிர்காலம் பற்றி சிந்திக்கும் நேரத்தில் சந்திக்க வேலணை சோதிடர் V. A. சிவராசா, 152B அரசடி றோட், கந்தர்மடம். (3508)

**யாழ். பழைய புத்தகக்கடை**

அரும் பெரும் பழையபுத்தகங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த இடம யாழ். பழைய புத்தகக்கடை. அர்ச்சுனா வீதி, (ஸ்ரான்லி) யாழ்ப்பாணம். (3210)

**தரன் ஸ்ருடியோ**

குறைந்த சலார் குறித்த நேரம் தீபாவளித் தினத்தை முன்னிட்டு 9-10-92, 27-10-92 வரை சகலவித போட்டோ மற்றும் வேலைகட்கு 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (3334)


# மொசாட்டுடன் புலிகளுக்கு தொடர்புகள் இல்லை

## - விஜயதுங்க

விடுதலைப்புலிகளுக்கும்இஸ்ரேலிய உளவு ஸ்தாபனமான மொசாட்டிற்கும் இடையில்தொடர்பு எதுவும் இல்லை என்று நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பிரதமர்டி.பி,விஜயதுங்கதெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் திகல்மடுவ பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப்அஸ்ரப்விடுதலைப் புலிகளிற்கும்மொசாட்டிற்கும் இடையே நல்லுறவு இருப்பதாகவும் முஸ்லிம் தாக்குதல் நடக்கும் போது புலிகளுக்கு பெருமளவு ஆயுதங்களும் வெடி மருந்துகளும் பணமும் மொசாட் இயக்கத்தினால் வழங்கப்படுகிறது, என்று கூறினார்.

இதற்கு பதில் அளிக்கும் வகையிலே டி பி விஜயதுங்க மேற்படி கூறினார், மொசாட் இயக்கத்திற்கும் புலிகளுக்கும் இடையில் தொடர்பு இல்லை அதற்கான எந்தவித ஆதாரம் இல்லை என திட்டவட்டமாகமறுத்துள்ளார்,

பொலனறுவை சம்பவத்தை தொடர்ந்துஎல்லைப்புற கிராமங்களுக்கு புதிய வடிவமைப்பில் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், இதில் பொலிசாரும் ஊர்காவற் படையினரும் இராணுவத்தினரும் ஈடுபட்டு உள்ளனர் என்றும் பாதுகாப்பு பற்றிய எனைய விபரத்தை வெளியிட மறுத்துள்ளனர்,

## நிவாரண உணவாக பழுதடைந்த கௌபி

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்த தீவுப்பகுதி மக்களின் நிவாரண உணவிற்குமிகவும் மோசமான முறையில் பழுதடைந்த கௌபி வழங்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் அவரவர் பகுதி உதவி அரச அதிபர் பணிமனையில் முறையீடு செய்துள்ளனர்.

இதையடுத்து சம்பந்தப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிற்கு மேற்படி பழுதடைந்த கௌபி விநியோகத்தை உடன் நிறுத்தும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்

மேலும் இதுபற்றி யாழ். புனர்வாழ்வுப் பகுதிக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (பா)


### ''மாற்றம்''

காலாண்டு மக்கள் சஞ்சிகை

**வெளியீட்டு விழா**

தலைவர்: கலாநிதி காரை.சுந்தரம்பிள்ளை

இடம்: கம்பன் கோட்டம், நல்லூர்

காலம்: 24.10.1992 மாலை 3.00 மணிக்கு

வெளியீடு: தமிழ்த்தாய்மன்றம்

(3509)



பேராதனை பல்கலைக் கழகத்துக்கான

**வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள்**

**G.A.Q. 93\94**

விரிவுரைகள் ஆரம்பம்:

**1 - 11 - 1992** [8 மணி]

பல்கலைக் கழகத்துக்கான சகல பதிவுகளையும் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

விபரங்களை நேரில் பெற்றுக்கொள்ளவும்


எஸ். அருள் நங்கை (நிர்வாகி)

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம்சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-5260)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி





### விடுதலைப்

கூட விடுதலைப் புலிகளிடம் இருக்கும் ஆயுதங்களினால் மட்டுப்படுத்தப்படுகிறது.

விடுதலைப்புலிகள் ஓரிடத்தில் மட்டுமல்ல இலங்கை முழுவதும் நின்று சண்டை பிடிக்கக்கூடிய பலமுள்ளவர்கள். அவர்களின் பலத்தை நாம் ஒருபோதும் பெற முடியாது என்பது மட்டும் உறுதி. எனவே விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தைகளை நடாத்தி அரசியல் தீர்வு ஒன்றை காண்பதே நாட்டின் ஒற்றை ஆட்சிக்கு பாதுகாப்பாக அமையும். எனவே இதுதொடர்பாக விடுதலைப்புலிகளுடன் எதுவித தாமதமும் இன்றி அரசு பேச்சு வார்த்தையை நடாத்துவதே எல்லோருக்கும் நன்மையளிக்கும். இதுமிகவும் கடினமானதும் சிக்கல் நிறைந்ததாக இருந்தபோதும் அரசியல் தீர்வே சிறந்தது இதில் அரசிற்கு மட்டுமல்ல எதிர்க்கட்சிகளுக்கும் பெரும் பொறுப்பு உண்டு இதுவரை இவர்கள ஒருவரை ஒருவர் சாடி வந்தார்கள.இனியாவது இக்கட்சிகள் இனப்பிரச்சினையைத் தீர்க்க முன்வர வேண்டும்.

ஆட்சிப் பீடத்தில் இருப்பவர்களும் ஆட்சிக்கு வர முயற்சிப்பவர்களும் இதை புரிந்துணர்வுடன் அரசு- எதிர்க்கட்சிகள் பிரச்சினை என்று காலம் தாழ்த்தாது மிக முககியமானதெனக்கருதி ஒற்றை இலங்கையில் மக்கள் வாழ வழிசமைக்க வேண்டும்.

### விழுதுகள்

மலையக மககள் தொடர்ந்து அனுபவிக்கும் துன்பமும் துயரமும் அவனது மனத்தில் அழியா இடம்பெற்றிருந்தன. என்பதற்கு வேறென்னசான்று வேண்டும்.

'இந் நாட்டு மக்களை நான் இதயத்தில் நேசித்தே நக்கிள்சின் தொடர்களிலே நாளெல்லாம்ஏறியுள்ளேன்'' என்ற கவிதை வரிகளின் மூலமாக அக் கவிஞர் குறிப்பாக உணர்த்திய செய்திகளை பரிபூரணனின் மூலமாகவே நான் விளங்கிகொள்ள முடிந்தது. களுவான (கறுப்பு விளக்கு) என்றும், சுழிசுலாங் (கீழைக் காற்று) என்றும் பெயர் சூடிக் கொண்டும் தம்மைத் தாமே புரட்சிகர சக்திகள் என்று கருதிக் கொண்டவர்கள் பௌத்த சிங்கள மேலாண்மையுடன் சரணடைந்த விதமும் அதனால் நக்கிள்சின் தொடர்களிலே நாளெல்லாம் அபலையாக அலைந்தவர்கள் ஏமாந்ததையும் அவரிடம் நான் கற்றுக்கொண்ட பாடங்கள்


இவ்வாறாக மலையகத்தையும் மலையக மக்களையும் நேசித்த பரிபூரணன் இலங்கைத் தீவில் தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் ஒரு தனியரசு அமைப்பதில் தான் தங்கியுள்ளது என்பது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதெளிவுடன் செயற்பட்டான் அதனாலேதான் துணிகரமான செயற்பாடுகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டான்.


போராடுவதற்காகவே கற்போம் என்றும் சிந்தனையை வரித்துக்கொண்ட அவன், தனது கல்வியையும், கல்விக்காகக் கிடைத்த சந்தர்ப்பத்தையும் போராட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்த எப்போதும் தயங்கியவன் அல்ல

வடக்கிலும், கிழக்கிலும் இராணுவத்தைக் கட்டவிழ்த்துவிட்டுக் கொழும்பில் நிம்மதியாக ஆட்சி நடத்த முடியாது என்பதை எடுத்துக் காட்டவேண்டும் என்னும் நோக்கில் கொழும்பு நகரில் குண்டுகள் சிலவற்றை வெடிக்

## நினைவு கூருகின்றோம்...

1992-10-23





## கப்டன் றேமன் [ இராமானுஜம் சீதாராம் ]

பருத்தித்துறை

வீரஜனனம் : 09-04-1968 வீரச்சாவு : 28-10-1990

பள்ளிக்குப் போகும் வேளையில்
பாசறைப் பயிற்சியில் ஈடுபட்டாய்;
துள்ளியிளம் காளையென ஓடிநீ-மக்கள்
துயர்தீர்க்கப் பாடுபட்டாய்;
எல்லையினைக் காக்க இரவுபகல்
இரும்பிதயங் கொண்டு இயங்கினாய்;
தொல்லை தரும் எதிரியினைக் கலைப்பதற்கு
கட்டுவனில் இறுதிப்போர் புரிந்தாயோ?..

(3496) குடும்பத்தினரும் நண்பர்களும்

வேண்டும்.

'இந் நாட்டு மக்களை நான் இதயத்தில் நேசித்தே நக்கிள்சின் தொடர்களிலே நாளெல்லாம்ஏறியுள்ளேன்'' என்ற கவிதை வரிகளின் மூலமாக அக் கவிஞர் குறிப்பாக உணர்த்திய செய்திகளை பரிபூரணனின் மூலமாகவே நான் விளங்கிகொள்ள முடிந்தது. களுவான (கறுப்பு விளக்கு) என்றும், சுழிசுலாங் (கீழைக் காற்று) என்றும் பெயர் சூடிக் கொண்டும் தம்மைத் தாமே புரட்சிகர சக்திகள் என்று கருதிக் கொண்டவர்கள் பௌத்த சிங்கள மேலாண்மையுடன் சரணடைந்த விதமும் அதனால் நக்கிள்சின் தொடர்களிலே நாளெல்லாம் அபலையாக அலைந்தவர்கள் ஏமாந்த கதையும் அவரிடம் நான் கற்றுக்கொண்ட பாடங்கள்.

கத்திற்கு அப்பாற்பட்டதெளிவுடன் செயற்பட்டான் அதனாலேதான் துணிகரமான செயற்பாடுகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டான்.

போராடுவதற்காகவே கற்போம் என்றும் சிந்தனையை வரித்துக்கொண்ட அவன், தனது கல்வியையும், கல்விக்காகக் கிடைத்த சந்தர்ப்பத்தையும் போராட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்த எப்போதும் தயங்கியவன் அல்ல

வடக்கிலும், கிழக்கிலும் இராணுவத்தைக் கட்டவிழ்த்துவிட்டுக் கொழும்பில் நிம்மதியாக ஆட்சி நடத்த முடியாது என்பதை எடுத்துக் காட்டவேண்டும் என்னும் நோக்கில் கொழும்பு நகரில் குண்டுகள் சிலவற்றை வெடிக்கவைப்பது என்று திட்டமிட்ட போது பரிபூரணனும் அதில் பங்கேற்க முன்வந்தான்.

தான் சுமந்துசென்ற வெடிகுண்டால்உயிரிழக்கப்போகும் அப்பாவிமக்களுக்காக மனம் வருந்தினாலும அரச இராணுவத்தின் அநியாய அட்டூழியங்களை கட்டுப்படுத்த வேறு வழியில்லை என்பதைப்புரிந்து கொண்டு அதற்காகவேகுண்டு வெடிப்புத் தாக்குதலை நடத்தச் சென்ற அவனது சீரிய சிந்தனையும் தி—மான செயற்பாடும் உதிர்ந்த வார்த்தைகளும் இம்மண்ணில் என்றும நிலைக்கும்.

— இளையவன்

### 28 ஆம் திகதி தொழிற் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இரண்டாம், மூன்றாம் தரத்திலான தேசிய தொழிற் பரீட்சைகள் இம்மாதம் 28-ம் திகதி ஆரம்பமாகிறது. மின் இணைப்பு, குழாய் பொருத்துதல், கட்டடத் தொழில், மரவேலை ஆகிய பயிற்சி நெறிகளுக்கான பரீட்சைகளும் நடைபெறும் என்று யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் திரு. க. ஜெயரட்ணம் தெரிவித்தார்.


விபரங்களை நேரில் பெற்றுக்கொள்ளவும்

எஸ். அருள் நங்கை
(நிர்வாகி)

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம்சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-5260)


## நினைவு கூருகின்றோம்...

### 1992-10-23

1987-ம் ஆண்டு இதேதினத்தில் கோப்பாய் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப்.வீரமணி** (தமிழ்ச்செல்வன்- ஆலங்கேணி,கிண்ணியா - திருக்கோணமலை)

**சைமன்** (கனகலிங்கம் சிவசுதர்சகுமார் - 21, ஆஸ்பத்திரிவீதி, கொட்டடி, யாழ்)

1988 ஆம் ஆண்டு நித்திகைக்குளம் பகுதியில் இந்தியப்படையினரின் கண்ணிவெடியில் சிக்கியதில் வீரச்சாவெய்திய

**சுகந்தன்** (சிற்றம்பலம் பரஞ்சோதி - பன்குளம், திருக்கோணமலை)

1989 ஆம் ஆண்டு கிளிநொச்சிப் பகுதியில் தேசவிரோதிகளால்சுட்டுக்கொல்லப்பட்ட கிருஷ்ணபுரத்தைச் சேர்ந்த 2 தமிழர்கள்.

1990-ம் ஆண்டு சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**கப்டன் றேமன்** (இராமானுஜம் சீதாராம் - சீதாராம்வீதி. புலோலி தெற்கு பருத்தித்துறை ய ழ்)

ஆனையிறவுப்பகுதியில் சிறிலங்காப் படையினர்மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**2-ம்லெப்.அப்பன்** (கதிர்காமநாதன் கலைச்செல்வன் - வண்ணாங்கேணி, பளை, யாழ்.)

பலாலிப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய

**கமலா** (நந்தினி சோதி-வண்ணாங்குளம், முல்லைத்தீவு

பிபிலைப்பகுதியில், சிறிலங்காப்படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய-

**சகாதேவன்** (அருளம்பலம் கந்தசாமி - புல்லுமலை - மட்டக்களப்பு)

சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட மட்டு- களுவங்கேணி- 1-ஐச் சேர்ந்தவர்களான- சிறுமி, கடற்றொழிலாளி- இராணுவத்தினரின் செல்வீச்சில் பலியான வந்தாறுமூலையைச் சேர்ந்த இளம்பெண்- மற்றும், இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட களுவங்கேணி வாசிகளான இளைஞன் உட்பட 2 தமிழர் -

1991ஆம் ஆண்டு மணலாறில் சிறிலங்காப் படையினருடனான சமரில் விழுப்புண் அடைந்திருந்து வைத்தியமனையில் வீரச்சாவெய்திய-

**கப்டன்மைக்கல்** (வேலையா சுரேஸ்குமார்- 60, சிவன் வீதி - திருக்கோணமலை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

[சி-5279]


தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு சகாய விலை...

நவநாகரிக டிசைன்களில்...

நாகரிக உலகின் ★ நங்கையர் ★ ஆடவர் ★ சிறுவர்கள் ★ மழலைகள்

அனைவருக்கும்....

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட...

★ ஓயிள் ஸ்கேட் & பிளவ்ஸ் ★ சாறிவகைகள் ★ துணிவகைகள்

★ றெடிமேட் ஜீன்ஸ் ★ சூட்டிங்ஸ் ★ சேட்டிங்

★ பேபி சூட் ★ சிறுவர் சிறுமியர் ஆடைகள்

அத்தனையும் ஒரே இடத்தில் ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

உங்கள் நல்வரவை நாடும்

லலிதா புடைவை மாளிகை

இல. 5, 6, நவீன சந்தை — யாழ்ப்பாணம்.

(சி-5216)

24 அக்டோபர் 1984

அதிகாலைநேரம் ''கண்டு போடப் போனஇடத்தில்மாடு செத்துப் போனது'' என்று கிடைத்த ஒற்றை வரித் தொலைபேசிச் செய்தி எம்எல்லோரையும் அலைக்கழித்தது. இதனுடைய உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்வதற்காக கொழும்புடன் தொடர்பு கொள்ள எடுத்த முயற்சியெல்லாம் முனைமழுங்கிப்போனது. இந்த வேளையில் தான் இன்று அதிகாலை முதல் கொழும்பில் பல இடங்களிலும் வெடிகுண்டுகள் வெடிக்க வைக்கப் பட்டுள்ளன என்று தொடங்கிய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் செய்தியில் வெடிகுண்டு ஒன்றைக் காவிச் சென்ற இளைஞர் ஒருவர் பொலிசார் சோதனையிட முயன்ற சமயம் குண்டை வெடிக்க வைத்தமையால் உடல் சிதறிப் பலியானார். பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவனான இரத்தினசபாபதி பரிபூரணன் என்பவரே இவ்வாறு பலியானதாக அடையாளம் காணப்பட்டுள்ளார். கொழும்பு நகரின் கரையோரப் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக அதிகாலை ஐந்து முப்பது மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. என்று தொடர்ந்த வானொலிச் செய்தியை செவி மடுக்க முடியாதளவுக்கு ஆங்காங்கே விம்மலும், விசும்பலும் கேட்கத் தொடங்கியிருந்தது ''ஐயோ... என்ரை பரி... நீ போயிட்டியாடா'' என்று ஒருவன் அலறினான்.

★ ★ ★

''பரி'' என்றும், ''அமுதன்'' என்றும் வாய் நிறைய அழைத்த இரத்தினசபாபதி பரிபூரணன் உண்மையிலேயே வித்தியாசமானவன் மேல் நோக்கி வாரிவிடப்பட்ட தலைமயிரும், கண்ணாடி அணிந்தமுகமும், திடகாத்திரமான தேகமும், அவனை இனங்காட்டப் போதுமானவையல்ல. எளிமையாகப் பழகும் பண்பும், கள்ளங்கபடமற்ற பேச்சும், அவனுடன்பழகிய எவரிடத்திலும் ஒரு மனப் பதிவை ஏற்படுத்தி விடவல்லவை அப்புத்தளை, வெலிமட, பண்டாரவளை போன்ற மலையகப் பகுதிகளில் இருக்கும் சிறுவர்கள் அன்புடன் ''அமுதன் மாமா'' என்று அழைக்கும் பரிபூரணன் மலையக மக்களின் வாழ்வு மேம்பட வேண்டுமென்பதில் மிக அக்கறை கொண்டிருந்தவன்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் ஊர்காவற்துறை பகுதியைப்பிறப்பிடமாகக்கொண்ட பரிபூரணனின் பெற்றோர் மலையகத்தில் நீண்டகாலம் ஆசிரியப் பணியாற்றி வந்தமையால் அவனும் இளமைக் காலம் முதலே மலையகத்திலேயே வளரலானான்.

மலையகப் பகுதியில் குறிப்பாக தோட்டத் தொழிலாளர்களின் அவல வாழ்வு துடைத்தெறியப்பட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்ட அவன் க.பொ.த. (உ/த) வகுப்பில் தான் சித்தியெய்தியதும் இலவசப் போதனை வகுப்புக்களை நடாத்தி வந்ததுடன் சிலபாடசாலைகளில் பகுதி நேரப் போதனாசிரியராக எந்தக் கட்டணத்தையும் எதிர்பாராமல் தன்னைத்தானே நியமித்துக் கொண்டும் செயற்பட்டு வந்தவன்.

பாடசாலைகளில் மட்டுமன்றி தோட்டப்புற லயன்களுக்கும் அடிக்கடி அவன் விஜயம் செய்வான். பள்ளிப் பிராயத்தையுடைய சிறுவர்களுக்கு கல்வியில் நாட்டம் ஏற்பட வேண்டும் என்பதற்காக அறிவுரைகள்- ஆலோசனைகள் கூறுவான். ''ஏம்பா! பெரட்டுக்களத்துக்கு போனாசல்லி கிடைக்குமே'' என்று நினைச்சு புள்ளீங்கள வேலைக்குஅனுப்ப வாணாம் பள்ளிக்கு அனுப்பனும் என்று அவனது கணிரென்ற குரல் லயத்து அறையில் எதிரொலித்தால் பெரும்பாலும் மறுபேச்சு இருக்காது. அப்படியே பேச்சோடு பேச்சாக நடந்து குசினிப்பக்கமும் சென்று எட்டிப் பார்த்து ''ரொட்டி சுட்டிருக்கா! என்ன சாப்பாடு தயார் செய்துள்ளனர். எப்படி அவர்கள் வாழ்க்கை ஓடுகிறது.'' என்பதை எல்லாம் கணிப்பு எடுத்துக்கொள்வான்.

இந்த மக்களிடத்தில் தான் நாம்கற்க வேண்டிய விடயங்கள் ஏராளமாக இருக்கிறது என்று எடுத்துக்கூறி எம்மோடு மலைமுகடுகளில் நடந்து திரிவான் ஈரச்சீலையின் உதவியுடன் பசியை மறக்கும் தந்திரம் கணப்பு அடுப்பை மூட்டி விட்டு சுற்றிவர உட்கார்ந்து குளிரை விரட்டும் மனப்பக்குவம் மூன்று தலைமுறையைச் சேர்ந்த ஒரே குடும்பத்தினர் ஒரே ஒரு லயக் காம்பராவில் எப்படி வாழ்க்கையை ஓட்டுகின்றனர் என்ற அந்தரங்கம் கம்பனிக்கு பத்து ரூபா, கறுப்பு கம்பனிக்கு இருபது ரூபா என்று ஏமாற்றும் பெரிய கங்காணியின் ஏமாற்றும் புரட்டுக்கள்'' மொட்டைப் பிடுங்கு'' ''அரைப்பேரு'' என்பன போன்றவசவுகளுக்கு பின்னிருக்கும் அர்த்தங்கள் இந்த மக்களின் சந்தாப் பணத்தில் ஜீவியம் நடத்தும் தொழிற் சங்கங்கள் இன்னும் இது போன்ற எத்தனையோ விடயங்கள் நாம் கற்கவேண்டி இருக்கின்றது ஆனால் இவை





பரிபூரணன்

யெல்லாம் எந்தப் புத்தகத்திலும் இல்லை என்பதுடன் இவற்றைக் கற்பதற்காக எந்தப் பல்கலைக்கழகமும் எமக்குப்பட்டம் தந்து விடப்போவதில்லை என்று பரிபூரணன் நகைச்சுவையுடன் கூறும் போது அவனுடைய சீரிய சிந்தனையில் கவரப்பட்டு ஊசிக்கு பின்னால் இழுபடும் நூல் போலாக வேண்டியது தான்.

★ ★ ★

மலைமுகடுகளில் மலையகத் தமிழர்கள் சிந்தும் கண்ணீரும் வியர்வையும் தான் ஆறாகப் பெருகி ஓடுவதாக அவன் கற்பனை விரிந்து செல்லும் ஒரு தடவை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அக்பர் விடுதியில் சந்தித்துப் பேசிக் கொண்டிருக்கும் போது கவிதைகள் பற்றிய சர்ச்சை எழுந்தது அப்போது 'நதி' என்னும் சஞ்சிகையில்கவிஞர்அரு. சிவானந்தன்எழுதிய''சென்று வருகிறேன் ஜென்ம பூமியே'' என்ற கவிதையை ஒவ்வொரு அணுவாக அவன் ரசித்த விதத்தால் நான் ஈர்க்கப்பட்டேன் அந்தக்கவிதையை பெற்றுக் கொள்ள முடியுமா என்று வினவிய மறுகணமே என்னையும் அழைத்துக்கொண்டுவெலிமட நகரில் இருக்கும் தன்னுடைய வீட்டிற்கு புறப்பட்டான். அருகிலிருந்த அவனது நண்பர்கள் முக்கிய வகுப்புக்கள் இருப்பதைச் சுட்டிக்காட்டிய போதும். அதனை உதாசீனப் படுத்திவிட்டு வெலிமடப் பயணத்தைத் தொடர்ந்தான் சிறிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் பந்தாடப்பட்ட மலையகத்து வாலிபன் ஒருவன் தலைமன்னார் துறைமுகத்திலிருந்து தனது நண்பர்களுக்கு பிரியாவிடை கூறுவது போல் அமைந்த அந்தக் கவிதையின் ஒவ்வொரு வரியும் அவனது மனதில் நன்கு பதிவாகியிருந்தது. 'நீ ரசிக்கும் பொருளென்ன? என்று கேட்டால் நான் பிறந்த மண்ணிது தான்'' என்று அந்தக் கவிஞர் கூறும் பதிலில் தனக்கு முழு உடன்பாடு இருப்பதாக அவன் வலியுறுத்தினான் இரண்டு நூற்றாண்டுகளாக

(2-ஆம் பக்கம் பார்க்க)

## நரசிம்ம நடராஜனின்

# இசைநடனக்கலைக்களஞ்சியம்

தமிழ்நாடு-காரைக்குடியில் பிறந்த செ.நரசிம்ம நடராஜன் (வயது 68) ஓர் இளைப்பாறிய சங்கீத ஆசிரியர். முப்பது வருடங்களுக்கு மேல் ஆய்வுகள் மேற்கொண்டு இசை நடனக் களஞ்சியம் என்ற நூலை எழுதி முடித்துள்ளார். இந்த நூலைப் பதிப்பிக்கும் முயற்சியில் இப்போது ஈடுபட்டிருக்கிறார். தமிழில் இது ஓர் கன்னி முயற்சியாகும். சென்னை க்ரியா வெளியீட்டாளர் இந் நூலை ஏழு பகுதிகளாக வெளியிடவுள்ளார்கள்.

நீங்கள் ஓர் இளைப்பாறிய சங்கீத ஆசிரியர். இசை நடனக் கலைக் களஞ்சியத்தை ஏழு பகுதிகளாக வெளியிட எப்படித் தயாரானீர்கள்? அதற்கான பொருளாதார பலம் எவ்வாறுஎன்று சொல்ல முடியுமா?

தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் எனக்குப் புலமையுண்டு. இம் மொழிகளில் உள்ள நடன சங்கீத நூல்களை ஒட்பீட்டு ரீதியாகப் படித்திருக்கிறேன். பேராசிரியர் சாம்பமூர்த்தி எழுதிய **Dictionary of South Indian Music** என்ற நூலின் அச்சுப் பிரதியில் பிழை திருத்தம் செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இந்த நூலின் மூன்று பகுதிகள் வெளியாகின. 1973இல் பேராசிரியர் இறந்ததும், இந்த முயற்சி தொடரவில்லை. அவர் வழியில் நான் இசை நடனக் கலைக் களஞ்சியத்தை எழுதியுள்ளேன். சென்னை ராயப்பேட்டை பெருஞ்சாலையிலுள்ள க்ரியா புத்தக வெளியீட்டாளர் - விற்பனையாளர் தமது வெளியீட்டுப் பணியில் ஒன்றாக எனது நூலை ஏழு பகுதிகளாக வெளியிட விருப்பம் தெரிவித்துள்ளார்கள். முதற் கட்டத்தில் ஏற்படக்கூடிய செலவுகளுக்கு என் பழைய புத்தகங்களில் சிலவற்றை விற்பதாக எண்ணம் மிகுதிச் செலவை க்ரியா ஏற்கும்.

O உங்களது சங்கீத ஞானம் பற்றிய பின்புலத்தைத் தெரிந்து கொள்ளலாமா?

நாற்பது வருடகால இசை அனுபவம். சிறுவயதிலேயே மனம் இசையில் ஈடுபட்டது. ''தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்.'' என்று தேவாரத்தில் திருநாவுக்கரசர் கூறியதற்கேற்ப இசையிலும், இசை வழிபாட்டிலும் எனது மனம் கூடுதலாகச் சென்றது. 1934முதல் காரைக்குடியில் மகாராஜபுரம் விஸ்வநாதன் (மகாராஜபுரம் சந்தானத்தின் தந்தை), பல்லடம் சஞ்சீவிராயர், அரியக் குடி இராமனுஜ ஐயங்கார், முசுரி சுப்பிரமணியம் ஆகியவர்களின் கச்சேரிகளைக் கேட்கும் வாய்ப்புக் கிடைத்தது. ஒன்பது பத்து வயதிலேயே கேள்வி ஞானம் இருந்தது. உருப்படிகளையும் பாடுவேன். 1944 இல் இருந்து எட்டு வருடங்கள் ஆதிவராக ஆச்சாரியாரிடம் முறைப்படி சங்கீதம் கற்கும் வாய்ப்புக் கிடைத்தது' சென்னைப் பல்கலைக் கழக சங்கீத டிப்புளோமாவிலும் கற்றுத்தேறினேன். பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் சாம்பமூர்த்தி, மதுரை சுட்பிரமணிய ஐயர், காரைக்குடி சிறினிவாச ஐயங்கார் எனக்கு ஆசிரியர்களாக இருந்தார்கள். பேராசிரியர் சாம்பமூர்த்தியிடம் அவர் வீட்டிலும் பாடம் கேட்டேன்.

O உங்கள் நூலின் கருப்பொருள் பற்றிச் சொல்ல முடியுமா?

நான் முக்கியமாகக் கருதும் விஷயம் இசையும் நடனமும் தான். இவை பற்றிய தகவல்களை எனது நூலில் காணலாம். இந்தியா, இலங்கை உள்ளிட இசை, நடனத்தில் துறைபோவர்கள், இசை வளர்க்கும் ஸ்தாபனங்கள், மாநாடுகள், இசை நூல்கள், இசைப் பாடல்கள், இசை நடனம், வளர்க்கும் பல்கலைக் கழகங்கள், இசைக்கருவிகள் பற்றிய தகவல்களை எனது நூலில் எதிர்பார்க்கலாம். மேலும் சமஸ்கிருத மூலங்களிலிருந்து இசை நடனம் பற்றிய தகவல்களைத் தொகுத்துத் தமிழில் தரப்பட்டிருக்கும்.

O ஒலித் துறையில் அவ்வப்போது ஏற்பட்ட தொழில் நுட்ப வளர்ச்சி இசை அமைபினைப் பாதித்துள்ளதா?

குரலில் உள்ள அழுத்தம், விறுவிறுப்பு, இனிமை, இராகங்களின் கலப்பு (Blending) ஆகியவற்றை ஒலித்துறையில் ஏற்பட்ட மாற்றம் பாதித்துள்ளது. மைக் முன் வாசிக்கும்



போது இசைக்கருவியினுடைய ஒலி பாட்டைக் குறைக்கிற அளவுக்கு உள்ளது. அளவாகச் ஸ்ரீறியோவில் ஒலி பெருக்க வேண்டும், அல்லது இசை பாட்டை அடக்கிவிடும். பாலக்காடு மணிஐயர் மைக் முன்னால் மிருதங்கக் கச்சேரி செய்வதைத் தவிர்த்துக் கொள்கிறார். எமது நாட்டில் பாவிக்கப்படும் மைக் நவீனத் தன்மை பொருந்தியதல்ல. சத்தம் சற்று அதிகமானால் அலறும். மைக் இல்லாத மேடையில் கச்சேரி செய்த

(5ஆம் பக்கம் பார்க்க)

**பேட்டி: மதன்**

சிக்கிறது ''மன்னர் ஆட்சியிலே அரசர்களும் சிற்றரசர்

னின் தீர்வுத் திட்டத்தைக் கடுமையாகச்சாடிதொண்டமான்

குறிப்பாக யு.என்.பியின் ''பதிதிரிகாதர்மத்தைத்தான்' டி.யு.

கருடனின் பிரதான நோக்கம் 'ஜனநாயகம்' என்றொரு கவ

தலைமயிரும், கண்ணாடி அணிந்தமுகமும், திடகாத்திர மான தேகமும், அவனை இனங்காட்டப் போதுமானவையல்ல. எளிமையாகப் பழகும் பண்பும், கள்ளங்கபட மற்ற பேச்சும், அவனுடன்பழகிய எவரிடத்திலும் ஒரு மனப் பதிவை ஏற்படுத்தி விடவல்லவை அப்புத்தளை, வெலிமட, பண்டாரவளை போன்ற மலையகப் பகுதிகளில் இருக்கும் சிறுவர்கள் அன்புடன் ''அமுதன் மாமா'' என்று அழைக்கும் பரிபூரணன் மலையக மக்களின் வாழ்வு மேம்பட வேண்டுமென்பதில் மிக அக்

வான்.

இந்த மக்களிடத்தில் தான் நாம்கற்க வேண்டிய விடயங்கள் ஏராளமாக இருக்கிறது என்று எடுத்துக்கூறி எம்மோடு மலைமுகடுகளில் நடந்து திரிவான் ஈரச்சீலையின் உதவியுடன் பசியை மறக்கும் தந்திரம் கணப்பு அடுப்பை மூட்டி விட்டு சுற்றிவர உட்கார்ந்து குளிரை விரட்டும் மனப்பக்குவம் மூன்று தலைமுறையைச் சேர்ந்த ஒரே குடும்பத்தினர் ஒரே ஒரு லயக் காம்பராவில் எப்படி வாழ்க்கையை ஓட்டுகின்றனர் என்ற அந்தரங்கம் கம்பனிக்கு பத்து ரூபா, கறு

### பரிபூரணன்

யெல்லாம் எந்தப் புத்தகத்திலும் இல்லை என்பதுடன் இவற்றைக் கற்பதற்காக எந்தப் பல்கலைக்கழகமும் எமக்குப்பட்டம் தந்து விடப்போவதில்லை என்று பரிபூரணன் நகைச்சுவையுடன் கூறும் போது அவனுடைய சீரிய சிந்தனையில் கவரப்பட்டு ஊசிக்கு பின்னால் இழுபடும் நூல் போலாக வேண்டியது தான்.

★ ★ ★

மலைமுகடுகளில் மலையகத்

தத்தின் கீழ் பந்தாடப்பட்ட மலையகத்து வாலிபன் ஒருவன் தலைமன்னார் துறைமுகத்திலிருந்து தனது நண்பர்களுக்கு பிரியாவிடை கூறுவது போல் அமைந்த அந்தக் கவிதையின் ஒவ்வொரு வரியும் அவனது மனதில் நன்கு பதிவாகியிருந்தது. 'நீ ரசிக்கும் பொருளென்ன? என்று கேட்டால் நான் பிறந்த மண்ணிது தான்'' என்று அந்தக் கவிஞர் கூறும் பதிலில் தனக்கு முழு உடன்பாடு இருப்பதாக அவன் வலியுறுத்தினான் இரண்டு நூற்றாண்டுகளாக

(2-ஆம் பக்கம் பார்க்க)

நாற்பது வருடகால இசை அனுபவம். சிறுவயதிலேயே மனம் இசையில் ஈடுபட்டது. ''தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்.'' என்று தேவாரத்தில் திருநாவுக்கரசர் கூறியதற்கேற்ப இசையிலும், இசை வழிபாட்டிலும் எனது மனம் கூடுதலாகச் சென்றது. 1934முதல் காரைக்குடியில் மகாராஜபுரம் விஸ்வநாதன் (மகாராஜபுரம் சந்தானத்தின் தந்தை), பல்லடம் சஞ்சீவிராயர், அரியக்குடி இராமனுஜ ஐயங்கார், முசுரி சுப்பிரமணியம் ஆகியவர்க

களை எனது நூலில் காணலாம். இந்தியா, இலங்கை உள்ளிட்ட இசை, நடனத்தில் துறைபோனவர்கள், இசை வளர்க்கும் ஸ்தாபனங்கள், மாநாடுகள், இசை நூல்கள், இசைப் பாடல்கள், இசை நடனம், வளர்க்கும் பல்கலைக் கழகங்கள், இசைக்கருவிகள் பற்றிய தகவல்களை எனது நூலில் எதிர்பார்க்கலாம். மேலும் சமஸ்கிருத மூலங்களிலிருந்து இசை நடனம் பற்றிய தகவல்களைத் தொகுத்துத் தமிழில் தரப்பட்டிருக்கும்.

O ஒலித் துறையில் அவ்வப்போது ஏற்பட்ட தொழில்

வேண்டும், அல்லது இசை பாட்டை அடக்கிவிடும். பாலக்காடு மணிஐயர் மைக் முன்னால் மிருதங்கக் கச்சேரி செய்வதைத் தவிர்த்துக் கொள்கிறார். எமது நாட்டில் பாவிக்கப்படும் மைக் நவீனத்

### பேட்டி: மதன்

தன்மை பொருந்தியதல்ல. சத்தம் சற்று அதிகமானால் அலறும். மைக் இல்லாத மேடையில் கச்சேரி செய்த

(5ஆம் பக்கம் பார்க்க)

# கருடன் வருகிறது

## நிலாந்தன்

''நாளை நமதே
நாளை என்ன நாளை இன்று கூட நமதுதான்
தேசிய ஒற்றுமையும் தோழமையும்
ஜனநாயகத்தின் பலமாகும்
அதுவே மக்கள் சக்தி
ஒரு தாய் மக்கள் நாம் என்போம்
ஒன்றே எங்கள் குலம் என்போம்''

இவ்வாறாகப் பிரகடனம் செய்தபடி, 'கருடன்'- லலித், காமினி அணியினரின் கட்சிப் பத்திரிகை -கடந்தமாதம்15-ம் திகதியிலிருந்து வெளிவரத் தொடங்கியுள்ளது. கொழும்பு மூன்று, ஃபிளவர் வீதியிலிருந்து பிரசுரிக்கப்படும் கருடனின் மற்றொரு பிரகடனம் பின்வருமாறு கூறுகிறது. '16 பெப்ரவரி 1992 ஆம் நாள் கருடன் அனுராதபுரத்திலே களமிறங்கியது. இப்போது அக்கருடன் தன் அகன்ற இறகுகளை விரித்து நாடு முழுவதும் செல்லப்புறப்பட்டு விட்டது. இந்த ஆகாய தேவனுடன் எந்தப் புலியோ அல்லது யானையோ சமர் புரிவது சாத்தியமா?''

ஜனாதிபதி பிரேமதாஸ தான் கருடனின் ''பொது எதிரி'' பிரேமதாஸவிற்கு எதிரான கிளர்ச்சியை ஜனநாயக மீட்புக்கானது என்று அது கூறுகிறது. நாட்டில் நிகழும் குற்றச் செயல்கள், கொலைகள் அநேகமானவற்றில் கருடன் பிரேமதாஸவைச் சந்தேகிக்கிறது அல்லது வாசகரிடம் அத்தகைய சந்தேகத்தை மறைமுகமாகத் தூண்ட முயல்கிறது. முன்னாள் பாதுகாப்பு மந்திரி ரஞ்சன், தளபதி கொப்பேகடுவா போன்றோரின் கொலைகளோடு பிரேமதாஸவின் நலன்களும் சம்பந்தப்படுவதாகக் கருடன் கூறுகிறது.

''அராலித்துறையில் கண்ணிவெடிதான் வெடித்ததா? அதிகாரிகள் வந்துகொண்டிருந்த வாகனத்தில் சக்தி வாய்ந்த குண்டு பொருத்தப்பட்டிருந்ததா?'' என்று கருடன் கேட்கிறது.

பிரேமதாஸவின் அரசியலை, 'கார்னிவல் அரசியல்'' என்று கூறும் கருடன், விடுதலைப் புலிகளிற்கு பிரேமதாஸ ஆயுதம் வழங்கியதான குற்றச்சாட்டைத் தொடர்ந்து புதுப்பிக்க முயல்கிறது. இதற்கு கேரளத்திலிருந்து வரும் 'மாத்ரு பூமி'யின் நிருபர் கே. எஸ். கே. குஷம்ப்ரம் இற்கு விடுதலைப் புலிகளின் தலைவர் தந்ததாகக் கூறப்படும் பேட்டியின் விபரங்கள் சிலதை ஆதாரமாகக் காட்டுகிறது. கருடனின் நடுப்பக்கங்கள் முழுவதும் புகைப்படங்கள் காணப்படுகின்றன. ஒருபக்கத்தில் புலிகளின் மகளிர் அணியினரின் புகைப்படங்கள் காணப்படுகின்றன- 'அச்சமில்லை அச்சமில்லை யென அச்சுறுத்தும் பெண் புலிகள்'' என்று அப்பக்கத்திற்குத் தலைப்பிடப்பட்டுள்ளது எதிர்ப்பக்கத்தில் எல்லைப்புறக் கிராமங்களில் கொல்லப்பட்ட சிங்களவர்களின் குறிப்பாகப் பெண்கள் சிறுவர்களின் புகைப்படங்கள் காணப்படுகின்றன. அடுத்த பக்கத்தில் கறுப்புப் பூனைகளால் கொல்லப்பட்டவர்கள் என்று கூறப்படுவோரின் புகைப்படங்கள் காணப்படுகின்றன. ''இரத்தப்புடையனே இன்னுமாஉனக்கு அரசியல்?' என்று அந்தப்பக்கம் கேட்கிறது.

கருடன் அமைச்சர்கள் தொண்டமானையும் செல்லச்சாமியையும் கடுமையாகச் சாடுகிறது தொண்டமானிற்குத் ''தலைசிறந்த தமிழர்'' பட்டம் தந்ததிற்காகத் திராவிடர் கழகத்தின் வீரமணியை ''பெரியார் கொள்கையை விற்றுப் பிழைக்கிறார்'' என்று விமர்சிக்கிறது ''பச்சோந்தித் தமிழன்'' என்பதே தொண்டமானிற்குத் தரப்பட வேண்டிய பட்டம் என்றும் கருடன் கூறுகிறது. செல்லச்சாமியை, 'கருடன்' ''பருப்புச் செல்லச்சாமி', என்று எழுதுகிறது.

''கருடன் பார்வையில் தமிழ் பேசும் மக்களின் நிலையும் நினைப்பும்'' என்ற தலைப்பில் மிஸ்டர் கழுகு என்பவர் எழுதியுள்ளார். இங்கு யுத்தம் பற்றிக் கூறப்படுகிறது. யுத்தத்திற்கான தீர்வைக்காண பிரேமதாஸ தவறிவிட்டார் என்றும் கூறப்படுகிறது ஆனால் கருடன் தன்னுடையது என்று எந்த ஒரு தீர்வையும் முன்மொழியவில்லை தவிர முக்கியமாக இனப்பிரச்சினையில் கருடனின் நிலைப்பாடு என்ன என்பது பற்றி பத்திரிகையில் எங்கும் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

''புருவம் மறைந்த மாயம் என்ன?'' என்ற தலைப்பின் கீழ் ஜனாதிபதி பிரேமதாஸவை கருடன் தனிப்பட்ட முறையில் தாக்குகிறதுபிரேமதாஸ தனது விருப்பத்திற்குரிய மாந்திரீகர்களின் ஆலோசனைப்படி தனது புருவத்தைச் சவரஞ்செய்து விட்டார் என்று கொழும்பில் பரவலாகக் கதைக்கப்பட்டது கருடன் இதைப் பின்வருமாறு விமர்சிக்கிறது ''மன்னர் ஆட்சியிலே அரசர்களும் சிற்றரசர்களும், தளபதிகளும் அமைச்சர்களும், அவைக்களப் புலவர்களும் மீசை வைத்துக் கொண்டார்கள்.

இது கம்பீரத்தின் சின்னமாக இருந்தது. மன்னராட்சி அன்று மக்களாட்சி காலத்தில் நாம் வாழ்கின்றோம். மக்களாட்சிக் காலத்திலே ஜனாதிபதிகள் பிரதமர்கள் அமைச்சர்களில் மீசை வைத்துக் கொண்டோர் அரிது. மீசையில்லாமல் இருப்பதும் அழகாகத்தான் இருக்கிறது ஆனால் கண் இமைக்கு காவலாக அமைந்த புருவத்தை அகற்றலாமா? புருவம் இல்லாமல் இருப்பது கண்ணுக்கு நல்லதல்ல இந்த மண்ணுக்கும் நல்லதல்ல புருவத்தை அகற்றுவது என்ன பிரேமையோ?'' என்று கருடன் கேட்கிறது. கருடன், ஜனநாயகத்தின் முக்கியசாமுத்திரிகா லட்சணமாக மீசையின்மையைக் கருதுகிறதா? லலித், காமினியிடம் தான் கேட்க வேண்டும்.

கருடன் மலையகத் தமிழர்களையும், தமிழ் பேசும் முஸ்லிம்களையும் நோக்கித்தான் பறக்கிறது. வடக்கிலும் கிழக்கிலும் நிகழும் யுத்தம் பற்றி அதுஎழுதுகிறது எனினும் யுத்த நிறுத்தம் குறித்தோ அல்லது சமாதானத்துக்கான தீர்வுகள் குறித்தோ அது விவாதிக்கவில்லை. தமிழர்களின் போராட்டத்திற்கான தீர்வைக்கூறாமல், முழுத்தீர்வுக்குமான ஜனநாயகம் பற்றிப் பேசுவது அநேகமாகக் கபடமானது என்பது தமிழர்களின் அநுபவமாயுள்ளது கருடன் நேரடியாக இனவாதம் பேசவில்லை. எனினும் இனப்பிரச்சினையின் தீர்வு பற்றிச் சிந்திக்காமல். அது 'ஜனநாயகம்' பற்றிக் கதைக்க முற்படும் போது அது தவிர்க்கமுடியாமல் இனவாதிகளின் பக்கம் சென்றுவிடுகிறது ஆனால் கருடனின் சகோதர சிங்களப் பத்திரிகையான 'ராஜாளியா' அசல் இனவாதம் பேசுவதாகக் கூறப்படுகிறது. ராஜாளியாவின் முதலாவது இதழிலேயே (மே.1) தொண்டமானின் தீர்வுத் திட்டத்தைக் கடுமையாகச்சாடிதொண்டமான் நாட்டைத் துண்டாட முயல்கிறார் என்ற தொனிப்பட ஒரு கட்டுரை எழுதப்பட்டிருந்தது. மேற்படி கட்டுரையின் தலைப்பு ''தொண்டமான் இருதயத்திலிருந்து ஒரு நாத்தல் தசையைக்கோட்கிறார்'' என்று இருந்தது. ராஜாளியா யாழ்ப்பாணத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்பாடுகள் குறித்துச் சந்தேகங்களை எழுப்புகிறது அரசிற்கும் புலிகளிற்கும் இடையிலான அந்தரங்க உறவைப் பேணும் முகவர் போல ஐ சி ஆர்.சி. தொழிற்படுகிறது என்ற தொனிப்பட ராஜாளியா சமீபத்தில் எழுதியிருந்தது அரசு ஐ.சி ஆர்.சி என்ற பெயரில் ''புலிகளிற்கு வெளிநாட்டு இராணுவ ஆலோசகர்களை வழங்குகிறது'' என்று ராஜாளியா கூறுகிறது. யுத்தத்தில் புலிகளின் கை மேலோங்கும் போது, பிரேமதாஸ. புலிகளிற்கு வழங்கிய ஆயுதங்களே அதற்குக் காரணம் என்றும், யுத்தமுனையில் துருப்புக்கள் குறைந்தளவு இழப்புக்களுடன் முன்னேறினால், அதுபுலிகளிற்கும் பிரேமதாஸவிற்கும் இடையிலான ரகசியப் புரிந்துணர்வின் அடிப்படையில் நிகழ்ந்தது என்றும் ராஜாளியாவும் அதன் மற்றொரு சகோதர சிங்களப் பத்திரிகையான 'பெரமுன'வும் எழுதுவதாக சண்டே ஒப்சேவரில் அநுருத்த திலகசிறி கூறுகிறார்.

கருடன் ஒரு முகம், ராஜாளியா இன்னொரு முகம், பெரமுன மற்றொரு முகம்... லலித் காமினி அணியினரின் கட்சிக்கு எத்தனை முகங்கள்? தமிழர்களிற்குக் கருடன் காட்டும் முகத்திற்கும் சிங்களவரிற்கு ராஜாளியாவும், பெரமுனவும் காட்டும் முகங்களிற்கும் இடையில் எவ்வளவு வித்தியாசங்கள்? யு-என்-பி யிலிருந்து விலகிச் சென்றவர்களின் கட்சியான டி-யு-என்.எவ்- பல விசயங்களில் யு-என்- பி- யின் குணங்களையே கொண்டிருப்பதாக கொழும்பில் விமர்சகர்கள் கூறுகிறார்கள். குறிப்பாக யு.என்.பியின் ''பத்திரிகாதர்மத்தைத்தான்' டி.யு.என்.எவ். உம் பின்பற்றுவது போல் தோன்றுகிறது. ஏரிக்கரைப் பத்திரிகைகள் தமிழில் (தினகரன்) ஒரு முகமும், சிங்களத்தில் (தினமின) வேறொரு முகமும் காட்டுவதற்கு நிகரானது இது என்று மேற்படி விமர்சகர்கள் கூறுகிறார்ாள்.

ராஜாளியா வெளிவந்தவுடன் அதன் பிரதிகளையு.என். பி.யினர்என்றுசந்தேகிக்கப்படுவோர் மொத்தமாகக் காசு கொடுத்து வாங்கி எரித்துவிடுறார்கள் என்று கொழும்பிலிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன ராஜாளியா என்றொரு பத்திரிகை வருவது பற்றி அடிமட்ட மக்கள் கேள்விப்பட்டிருந்தாலும் நிஜப்பத்திரிகையை அவர்கள் பார்ப்பது குறைவு என்றும் கூறப்படுகிறது. ஏனெனில் நிஜப்பத்திரிகை போல முன்பக்கம், கடைசிப்பக்கங்களை அச்சடித்து விட்டு உட்பக்கங்களில் ஆபாசப்படங்களும். காமினிக்கிருந்த பெண் தொடர்புகள் பற்றி லலித் எழுதியது போல கட்டுரைகளும் பிரசுரிக்கப் பட்ட போலிப் பத்திரிகைகளை அரசிற்குச் சார்பானவர்கள் என்றுசந்தேகிக்கப்படுபவர்கள் வெளியிடுவதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. இப்போலிப் பத்திரிகைகள் அடிமட்ட மக்களைச் சென்றடைவதோடு ஒவ்வொரு பாடசாலைக்கும் அனுப்பப்படுவதாகவும் மேலும் அச்செய்தி தெரிவிக்கின்றன.

ராஜாளியா, பெரமுன, கருடன் போன்றவை மிகவும் ஆபத்தான எதிரிகள் விசயத்தில் இரக்கமற்ற ஒருவரோடு மோதிக் கொண்டிருக்கின்றன. கருடன் முதலாவது இதழை 'தினகரன்' ''குருடன்'' என்று விமர்சித்திருந்தது விரைவில் கருடனும் தினகரனும் களத்தில் நேரடி மோதலில் இறங்கக்கூடும் என்று கொழும்பில் கூறப்படுகிறது. பிரேமதாஸவிற்கு எதிரான கொயிகம கிளர்ச்சியில் கொழும்பு, மலையகத்தமிழர்களையும் முஸ்லிம்களையும் தம்மோடுஅணிதிரட்டுவதே கருடனின் பிரதான நோக்கம். 'ஜனநாயகம்' என்றொரு கவர்ச்சியான கோஷத்தை அவர்கள் முன்வைக்கிறார்கள் ஆனால் ஜனநாயகம் பற்றி அவர்களிடம் உன்னதமான சிந்தனைகள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை கருடன் அத்தகைய நம்பிக்கைகள் எதையும் தரவில்லை பிரேமதாஸவின் மீதான எரிச்சலும், வெறுப்பும், அச்சமும் தான் அவர்களது அரசியல் எனினும் அவர்களிற்குள்ளும் ஒற்றுமையில்லை ராஜாளியா கட்சியின் உத்தியோக பூர்வ பத்திரிகை என்று கூறப்படுகிறது இதற்குப் பொறுப்பு கட்சியின் பொதுச் செயலாளர் ஜி. எம். பிரேமச்சந்திர என்றும கூறப்படுகிறது. ஆனால் இடையில் லலித் தனது சொந்தச் செலவில் கடசிச்சின்னத்தோடு 'பெரமுன' வை ஆரம்பித்திருக்கிறார். ஒரே கடசியின் சின்னத்தோடு எதற்காக இரண்டு பத்திரிகைகள் என்று கொழும்பில் விமர்சகர்கள் கேட்கிறார்கள். ராஜாளியா பாமரரிற்கும் பெரமுன புத்திஜிவிகளிற்குமானது என்று சில டி யு என் எவ் காரர்கள் விளக்கம் தர முயன்றாலும் கட்சிக்குள் பிளவுகள் இருப்பதையே இது காட்டுகிறது பிரேமதாஸவைப் பற்றிய அச்சம் தான் அவர்களைத் தொடர்ந்தும் இணைத்து வைத்திருக்கிறது. ஒரு விதத்தில் பிரேமதாஸ தான் அவர்களை இணைத்து வைத்திருக்கும் ஒரே சக்தியும் கூட பிரேமதாஸ இல்லாத யு என். பி. க்குத் தலைமை தாங்க அவர்கள் மிகவேட்கையோடு காத்திருக்கிறார்கள். அப்படியொரு சந்தர்ப்பம் வாய்த்தால், அப்பொழுது கறுப்புப் பூனைகளையும் மனித உரிமைகளையும் 'ஜனநாயகம்' பற்றிய பிரகடனங்களையும் மறந்துவிடவோ அல்லது தமக்குச் சாதகமாக வியாக்கியானம் செய்யவோ அவர்களால் முடியும்.

# ஒரு சுவைஞன் பார்வையில் 'சீதன அம்புகள்' நாட்டிய நாடகம்

பேராசிரியர் **அ. சண்முகதாஸ்**

சீதனக் கொடுமை பற்றிப் பாடாத கவிஞர்கள் வெகு குறைவு; பலர் இக்கொடுமை பற்றி எழுதியுள்ளார்கள். ஆனால் மிகக்கொடுமையான நிகழ்வு என்னவென்றால், சீதனக் கொடுமை பற்றி எழுதுகின்றவர்களும், அதனைப் படித்து நன்குவிளங்கிக் கொண்டவர்களும் சீதனம் வாங்குவதுதான். பிறர் நல உணர்வும் ஈகையுணர்வும் ஒருங்கமைந்த கலைஞர்கள் இக்கொடுமையை மக்கள்சுவைக்கும் கலைவடிவின் மூலம் புலப்படுத்தும் போது அது உண்மைத் தன்மையுடையதாகவும் உயர் பயன் கொடுக்கத் தக்கதாகவும் அமைந்து விடும். விடுதலைப் புலிகள் பெண்கள் படையணி தயாரித்தளித்த 'சீதன அம்புகள்' என்னும் நாட்டிய நாடகம் இந்த வகையைச் சேர்ந்ததேயாகும்.

ஏறக்குறைய ஒரு மணித்தியாலமளவில் நடைபெறும் இந் நாட்டிய நாடகத்தில் சீதனத்தாலே (சீதன அம்புகளாலே தாக்கப்பட்டு) துன்பமடைந்து துடிக்கும் ஒரு நாயகியையும், துடித்து இறக்கும் இன்னொரு நாயகியையும் காட்டி, இத்தகைய கொடுமையான சமூகச் செயற்பாட்டினைக் களைந்தெறிய மக்களே திரண்டெழ வேண்டுமென்ற உண்மையினையும்புலப்படுத்தி வைத்துள்ளனர்.

நாட்டிய நாடகத்தின் கதை பின்வருமாறுதொடர்கின்றது. தமிழீழ அழகுப் பெண்ணவள் இளமைக்கேற்ற குதூகலத்துடனே தன் நாயகன் வரவு காத்து நிற்க, வந்த நாயகனுடனே நாயகி ஊடுகிறாள். வழக்கம் போன்ற காதற் சூளுரைகளை நாயகன் கூறுகிறான். ''பருதியின் மேலும் அந்தப் பால்நிலா மேலும் உறுதிகள் கோடி செய்தோம்; உண் மத்தராயிருந்தோம்'' என்று இருந்து விடாமல், இந் நாடகத்து நாயகி உள்ளுணர்வாலே உண்மைநிலை உணர்ந்தவளாக,

ஆயிரம் சத்தியம் சொல்லு
வீர் - விண்ணை
அள்ளி மடிப்பதாய்ச்
சொல்லுவீர் - நாளை
திருமண நாள்வரின்
பொருள் நாடி
எனைப் புறம் தள்ளுவீர்''

என்று கூறுகிறாள். நாயகன் மேலும் உறுதியளிக்கிறான்.

'கூனல் பிறவி நானல்லடி
— பொருள்
கேட்டுப் பிரிந்திடல்
செய்வேனோ'

என்று கூறியது பெண் மனத்

ஆடிய பெண், நாயகன் பிரிவினைப் பொறுக்கமாட்டாமையை ஜதியாலும், முகபாவத்தாலும் வெளிப்படுத்துமிடமே கலைச் சுவைஞர்களுக்கு விருந்தாகக் கூடியது.

அடுத்தகாட்சி வெகுகோலாகலமாக அமைகின்றது. நாயகியின் தந்தையும் தாயும் அவளுக்குத் திருமண ஒழுங்குகள் செய்கின்றனர்.

'ஊரிங்கு கூட்டுவேன்-நான்
ஊர்வலம் காட்டிடுவேன்'

என்று திருமண ஆரவாரஞ் செய்கின்றார் தந்தை.

'பட்டை யணிந்திடடி - நீ
பொட்டைத் திருத்திடடி'

என்று பெண்ணுக்குக் கோலஞ் செய்கிறாள் தாய். இவ்வேளை தாய், தந்தை புடைசூழ மாப்பிள்ளை வருகிறார். இவ்விடத்தில் நாயகியோ அருவருப்பு, கோபம், அடக்க முடியாத கவலை, ஒன்றும் செய்ய முடியாக் கையாலாகாத் தன்மை என்னும் உணர்வுகளையெல்லாம் முக பாவங்களாலே புலப்படுத்துகிறாள். வந்தவர்களோ எல்லாம் தங்கள் கைகளிலேதான் என்ற முறையில் அவளைச் சுற்றிச் சுற்றிப் பார்க்கிறார்கள். ஒவ்வொருவரும் தத்தம் போக்குக்கேற்ப மணப்பெண்ணை அளவிடுகிறார்கள். கடையிலே ஒரு பொருளை வாங்குவதற்கு முன்னர் பார்வையிடுவது போன்றதொரு நிலையைத் தயாரிப்பாளர்கள் இங்கு ஏற்படுத்துவதின் மூலம் சமூகத்திலே திருமணம் தொடர்பாக இருந்து வரும் இழிநிலையை நன்கு புலப்படுத்துகின்றனர். அடுத்து பொருளுக்கு விலை பேசுவது போல மாப்பிள்ளையின் தந்தையும் தாயும், சீதனப் பட்டியலை விபரிக்கின்றனர். தாய் வீடு கேட்கிறாள்; நகை கேட்கிறாள், தந்தை தோட்டங் கேட்கிறார்; வயற்காணி கேட்கிறார். ஒவ்வொருவரும் ஒவ்வொன்றையும் கேட்டு விட்டு ஒரு தனி ஆவர்த்தனம் செய்யத் தொடர்ந்து மௌனம் நிலவுகின்றது. இந்த மௌனம் இவையெல்லாம் தர எங்களுக்கு வசதியில்லை என்று நாயகியின் பெற்றோர் கூறும் மறுமொழியாகக் கொள்ளலாம். திருமணப் பேச்சுகுழம்புகிறது. மாப்பிள்ளையின் தாய், தந்தையினுடைய நடிப்பு நன்

படுத்துகின்றனர். திருமணம் குழம்பியது நாயகிக்கு மகிழ்ச்சி. தன் நாயகன் கூறிய உறுதிமொழியை மனத்திலே மீட்டி,

'கூனல் பிறவி நானல்லடி
என்று
கூறிய வார்த்தை யமுதமே'

என்றுகூத்திடுகிறாள். ஆனால் அவள் பெற்றோரோ மீளாத் துன்பத்திலாழ்கின்றனர்.

'சீதனப் பேய் அரசாளும்
சீர் கெட்ட பூமியடி
பாதையிலே இருளென்றால்
பார்த்தெங்கு நடப்பதடி'

என்று தந்தை பிரலாபித்துத் தளர் நடை போடுகின்றார். இந்தச் சந்தர்ப்பத்திலே அம்பிகையைத் தூக்கி ஊர்வலஞ் செய்வதாகப் பாவனை செய்யும் ஒரு காட்சி இடம் பெறுகின்றது. 'உலகதது நாயகியே எங்கள் முத்து மாரியம்மா' என்னும் பாட்டும் பொருத்தமாக இவ்விடத்திலே ஒலிக்கின்றது.

''மணி வெளுக்கச் சாணை
யுண்டு - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள்
முத்துமாரீ
மனம் வெளுக்க வழி
யில்லை ..''

என்னும் பாரதியின் சொல்லம்புகளைச் சீதன அம்புகளுக்கு எதிராகப் பாய்ச்ச வேண்டும் என்ற குறிப்பு இவ்விடத்திலே பார்வையாளருக்கு உணர்த்தப் படுகின்றது. தயாரிப்பாளர்களுடைய கற்பனை, கலையுணர்வு ஆகியன இவ்விடத்திலே பளிச்சிடுகின்றன.

அடுத்த காட்சி, குறிப்பிட்ட சீதனம் கொண்டுவராத இன்னொரு நாயகியினுடைய நிலையைக் காட்டுவதாக அமைகின்றது மாமன், மாமி ஆகிய இருவரின் நடுவிலே அம்புபட்ட மான்போல் அவள் துடிக்கின்ற நிலை புலப்படுத்தப்படுகின்றது.

'மாடென்றார் தோட்ட
மென்றார்
மடிநிறைய நகைகளென்
றார்

கூறுகிறாள். இறுதியிலே மாமனும் மாமியும், ஒரே தீர்மானம் செய்கின்றனர். அது நடனத் தீர்மானமாகவும் நடவடிக்கைத் தீர்மானமாகவும் அமைகின்றது. பெண்ணைத் தள்ளி விழுத்தி உதைத்துத் துரத்துதலே நடவடிக்கைத் தீர்மானமாகின்றது. இதைத் தொடர்ந்து இடம் பெறும் காட்சி மிக அற்புதமாக அமைகின்றது தள்ளி விழுத்தப்பட்ட பெண்ணினுடைய கனவுநிலையும் நனவு நிலையும் காட்டப்படுகின்றன. திருமணஞ் செய்த போது நடந்தவற்றை அபிநயிக்கும் நர்த்தகி ஒரு கண நேர மகிழ்வினை முகத்திலே காட்டி, மறுகணம் நனவு நிலைக்கு வந்து,

'கனவுகளே வாழ்க்கை என்று
கலங்குகிறேன் நானிங்கு'

என்று துவளுகின்ற காட்சி இன்னொரு சுவைப் பகுதியாகும். இறந்து விட்ட அப்பெண்ணின உடல், ஜதிக்கேற்ப மேடையிலே ஊர்வலமாகத் தூக்கிச் செல்லப்படுகின்றது. முதல் நாயகியும் இதிலே வந்து சேருகின்றாள். அவர்களுடைய தீர்மானம்:

''சாமேட்டில் பெண்ணை
இருத்தி
தீமூட்டும் கொடுமைஒழிய''

என்று முதல் நாயகி கூற,

''பூமியில் அனைவருமே
பொங்கி எழுந்திடுவோம்
பொங்கி எழுந்திடுவோம்''

என்று ஏனைய பெண்களும் ஆரவாரிக்கின்றனர்.

மரண ஊர்வலம் அகல, நாதஸ்வர மேளத்தோடு திருமண ஊர்வலம் வருவதாக அபிநயித்து ஒரு குழு மேடைக்குள் வருகின்றது. திருமண மாப்பிள்ளையாகத்தன் நாயகன் செல்வதைக் கண்ட முதல் நாயகி, 'அம்புபட்ட மானொன்றின் ஆவி துடிக்கின்றது... என்று மனம் வெதும்பி ஆடுகின்றாள். நர்த்தகியினுடைய முக பாவங்கள், அபிநய முத்திரைகள் அவளை அம்புபட்ட மானாகவும், புண்பட்ட பறவையாகவும், கண்ணீரிலே மிதக்கின்ற பெண்ணாகவும் மேடையிலே காணவைக்கின்றன.

ஆறு பேராளிகளுடைய ஜதீஸ்வரம் அடுத்து இடம் பெறுகிறது.

கண்ணீரிலே வாழ்வென்ன
பெண்ணே நீ புறப்படுவாய்
மண்ணோடுஉறவு கொண்ட
மாதரோடுமகிழ்ந்திடுவோம்

என்று வழிதேடும் நாயகிக்கும் மற்றோர்க்கும் நம்பிக்கையூட்டும் கருத்துக்கள் கூறப்படுகின்றன. அடுத்து இடம் பெறும் நிகழ்வுகள் எல்லாம் இக்கருத்துக்களை முன்னெடுத்துச் செல்ல மக்கள் திரளுவதைக் காட்டுகின்றன ''புயலாய் எழுந்தோம்'' என்று தீவட்டிகளுடன் பலர் கூடி ஆடும் நடனம் இந்நாட்டிய நாடகத்தின் பயன் என்ன என்பதைக் காட்டுவதாக அமைகின்றது. 'தமிழீழ ஒளி காணத் தடைகள்பிளந்தோம்' ஆர்ப்பரிக்கும் அக் கூட்டம்,

'சீதனப் பேயினை ஓட
வைட்போம்
சீதளக் காற்றிங்கு கூ-
வைப்போம்'

என்று தீர்மானம் செய்கின்றது. இறுதியில்.

'மாவீரர் வீரருக்கு ஜெய
மங்களம் — எங்கள்
மாண்புமிகு தலைவருக்கு
சுப மங்களம்'

என்ற மங்களத்துடன் ''சீதன அம்புகள்'' என்னும் இந்நாட்டிய நாடகம் முடிவடைகின்றது.

இந்நாட்டிய நாடகத்தினுடைய கவர்ச்சி ஆற்றல்கள் சிலவற்றைப் பின்வருமாறு நிரைப்படுத்தலாம்.

அ) சீதனக்கொடுமையைப் புலப்படுத்த, அக்கொடுமையால் இறக்கும் ஒரு நாயகியையும் அக்கொடுமையை இறுதிவரை எதிர்த்துப் போராட முனையும் இன்னொரு நாயகியையும் கொண்ட கதை.

ஆ) கதையை நாட்டிய நாடகமாக்கி நடத்துமிடத்து, அதிலே தொய்வு இன்றி, பார்வையாளர்களுக்குச் சலிப்பேற்படாவகையிலே நடத்திச் சென்றமை.

இ) உணர்வுகளைப் புலப்படுத்தப் பொருத்தமான ஜதிகளையும், நடைகளையும், பாடல்களையும் கையாண்டமை.

இந்நாட்டிய நாடகத்திலே காணப்பட்ட ஒரு குறைபாட்டினையும் இங்கு சுட்டுதல் இன்றியமையாததாகும். அதாவது, பாடல்களைப் பாடியவர்கள் அப்பாடல்களின் பொருள்தெளிவாகப் பார்வையாளர்களால் விளங்கிக்கொள்ளத்தக்க வகையிலே பாடியிருக்கலாம். சில சந்தர்ப்பங்க



## பேரருட் திரு. இராயப்பு யோசவ் ஆண்டகை

### மன்னார் மறைமாவட்ட ஆயர் ஆகிறார்

மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராக அருட்திரு. இராயப்பு யோசவ் அடிகளார் மடுமாதாதிருப்பதியில் கடந்த 20-ம் திகதி செவ்வாய்க்கிழமை திருநிலைப்படுத்தப்பட்டார். பதினொரு ஆண்டுவளர்ச்சி பெற்றுள்ள மன்னார் மாவட்டத்தின்இரண்டாவது ஆயராக இவர் பதவியேற்றுள்ளார். 1981 ஜனவரி24 ம் திகதி வரை யாழ். மாவட்டத்தின் ஒரு பகுதியாயிருந்த மன்னார் மாவட்டத்தின் ஆயராகவிருந்து தற்போது யாழ். மறைமாவட்ட ஆயராகப் பதவியேற்கும் பேரருள் திரு. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் இடத்தில் இவர் நியமனம் பெற்றுள்ளார்.

அருட்திரு. இராயப்பு யோசவ் அடிகளார் நெடுந்தீவை பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் குடும்பத்தில் நான்காவது புதல்வராக 1940, ஏப்ரல் 16 ஆம் திகதி பிறந்தார். இவரது தந்தையரான யோசவ் இராயப்பு 1976 இல் காலமானார். இவரது அண்ணன் அந்தோனிப்பிள்ளைக்கு இப்போது வயது 80. 1940 யூலை 26 ஆம் திகதி குழந்தைக்கு திருமுழுக்கு அளிக்கப்பட்டபோது அவரது பாட்டனாரின் பெயராகிய யோசவ் என்பதுடன் ஞானானந்தர் என்னும் பெயரும் இடப்பட்டது,

அடிகளார் தமது ஆரம்பக் கல்வியையும், நடுநிலைக் கல்வியையும் புங்குடுதீவு புனித சவேரியார் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் பெற்றுக் கொண்டார். 1950-ல் அடிகளாரின் பெற்றோர் மன்னார் மாவட்டம் செட்டிகுளத்தில் அமைந்துள்ள முகத்தன்குளம் குடியேற்றத் திட்டத்தில் குடியமர்ந்தார்கள். குடும்பம் வருவாய் தேடி இடம் பெயர்ந்து வசிக்கச் சென்றபோதும் சிறுவனான யோசவ் 1954 வரை தமது கல்வியைத் தொடர்வதற்காக நெடுந்தீவில் தங்கியிருந்தார். பின்பு முருங்கன் றோ. க. பாடசாலையிலும், விடுதியிலும் அவருக்கு இடம் கிடைத்தது.

1955 ஜனவரி 04 ஆம் திகதி யோசவ் புனித மாட்டீனார் சிறிய குருமடத்தில் சேர்ந்து பிதா ரி. ஏ. ஜே.மதுரநாயகம் அவர்களால் உருவாக்கப்படலானார். புனித பற்றிக்ஸ் கல்லூரியில் தமது கல்வியைத் தொடர்ந்து கற்றார்.

1960 இல் அம்பிட்டியா குருமடத்துக்கு அனுப்பப்பட்டு அங்கு மெய்யியல் கல்வியை முடித்துக் கொண்டு திருச்சி புனித சின்னப்பர் குருமடத்தில் இறையியல் கற்பதற்காக ஆயரால் தமிழ்நாட்டிற்கு அனுப்பப்பட்டார். 1967 டிசம்பர் 13 ஆம் திகதி யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் ஆயர் எமிலியானுப்பிள்ளை அவர்களால் திருநிலைப்படுத்தப்பட்டு யாழ்ப்பாணம், மன்னார், முருங்கன் பகுதிகளில் பங்குத் தந்தையாகவும், துணைப் பங்குத் தந்தையாகவும் கடமையாற்றியுள்ளார்.

னுடனே நாயகி ஊடுகிறாள். வழக்கம் போன்ற காதற் சூளுரைகளை நாயகன் கூறுகிறான். ''பருதியின் மேலும் அந்தப் பால்நிலா மேலும் உறுதிகள் கோடி செய்தோம்; உண் மத்தராயிருந்தோம்'' என்று இருந்து விடாமல், இந் நாடகத்து நாயகி உள்ளுணர்வாலே உண்மைநிலை உணர்ந்தவளாக,

ஆயிரம் சத்தியம் சொல்லு
வீர் - விண்ணை
அள்ளி மடிப்பதாய்ச்
சொல்லுவீர் - நாளை
திருமண நாள்வரின்
பொருள் நாடி
எனைப் புறம் தள்ளுவீர்''

என்று கூறுகிறாள். நாயகன் மேலும் உறுதியளிக்கிறான்.

'கூனல் பிறவி நானல்லடி
— பொருள்
கேட்டுப் பிரிந்திடல்
செய்வேனோ'

என்று கூறியது பெண் மனத்திலே ஓரளவு நம்பிக்கை பிறக்க வைக்கிறது. இருவரும் சேர்ந்து ஆனந்தத் தாண்டவம் புரிகின்றனர். இருவரும் நன்றாக ஆடுகின்றனர். இருவரிலும் நாயகியுடைய உணர்ச்சிப் புலப்பாடு சிறப்பாக அமைகின்றது. ஆனந்தமாக

...போன்றதொரு நிலையைத் தயாரிப்பாளர்கள் இங்கு ஏற்படுத்துவதின் மூலம் சமூகத்திலே திருமணம் தொடர்பாக இருந்து வரும் இழிநிலையை நன்கு புலப்படுத்துகின்றனர். அடுத்து பொருளுக்கு விலை பேசுவது போல மாப்பிள்ளையின் தந்தையும் தாயும், சீதனப் பட்டியலை விபரிக்கின்றனர். தாய் வீடு கேட்கிறாள்; நகை கேட்கிறாள், தந்தை தோட்டங் கேட்கிறார்; வயற்காணி கேட்கிறார். ஒவ்வொருவரும் ஒவ்வொன்றையும் கேட்டு விட்டு ஒரு தனி ஆவர்த்தனம் செய்யத் தொடர்ந்து மௌனம் நிலவுகின்றது. இந்த மௌனம் இவையெல்லாம் தர எங்களுக்கு வசதியில்லை என்று நாயகியின் பெற்றோர் கூறும் மறுமொழியாகக் கொள்ளலாம். திருமணப் பேச்சுகுழம்புகிறது. மாப்பிள்ளையின் தாய், தந்தையினுடைய நடிப்பு நன்றாக அமைந்துள்ளது. தங்கள் மகன் மூலமாக வரப் போகும் பொருள்களையெல்லாம் ஆளப்போகிறோம். என்ற மகிழ்ச்சியினையும் அகங்காரத்தினையும் தம் ஆடலாலும் முக பாவங்களாலும், அவர்கள் அருமையாகப் புலப்

ம்புகளைச் சீதன அம்புகளுக்கு எதிராகப் பாய்ச்ச வேண்டும் என்ற குறிப்பு இவ்விடத்திலே பார்வையாளருக்கு உணர்த்

பொங்கி எழுந்திடுவோம்'' என்று ஏனைய பெண்களும் ஆரவாரிக்கின்றனர்.

மரண ஊர்வலம் அகல,

## பேராசிரியர் அ. சண்முகதாஸ்

தப் படுகின்றது. தயாரிப்பாளர்களுடைய கற்பனை, கலையுணர்வு ஆகியன இவ்விடத்திலே பளிச்சிடுகின்றன.

அடுத்த காட்சி, குறிப்பிட்ட சீதனம் கொண்டுவராத இன்னொரு நாயகியினுடைய நிலையைக் காட்டுவதாக அமைகின்றது மாமன், மாமி ஆகிய இருவரின் நடுவிலே அம்புபட்ட மான்போல் அவள் துடிக்கின்ற நிலை புலப்படுத்தப்படுகின்றது.

'மாடென்றார் தோட்ட
மென்றார்
மடிநிறைய நகைகளென்
றார்
எங்கையடி எல்லாம்!

என்று ஒவ்வொன்றாகக் கேட்கின்றார்கள். பெண்ணவளோ

'அண்ணன் ... மடிந்து
விட்டான்
அந்நியரின்கொடுமையினால்
தந்தை தளர்ந்தார் .... '

என்று தன் நிலையைக்

நாதஸ்வர மேளத்தோடு திருமண ஊர்வலம் வருவதாக அபிநயித்து ஒரு குழு மேடைக்குள் வருகின்றது. திருமண மாப்பிள்ளையாகத்தன் நாயகன் செல்வதைக் கண்ட முதல் நாயகி, 'அம்புபட்ட மானொன்றின் ஆவி துடிக்கின்றது... என்று மனம் வெதும்பி ஆடுகின்றாள். நர்த்தகியினுடைய முக பாவங்கள், அபிநய முத்திரைகள் அவளை அம்புபட்ட மானாகவும், புண்பட்ட பறவையாகவும், கண்ணீரிலே மிதக்கின்ற பெண்ணாகவும் மேடையிலே காணவைக்கின்றன. அவளைத் தேடி நாயகன் வருகின்றான். அவர்களிருவருக்குமிடையே நடக்கும் உரையாடல் மூலமாக சீதனக் கொடுமைநன்கு புலப்படுத்தப்படுகின்றது. ஒரு வழியும் தெரியாமல் நிற்கும் நாயகி, இக்கொடுமை தீர வழி என்ன என்று நினைக்கின்றாள்.

இறுதிவரை எதிர்த்துப் போராட முனையும் இன்னொரு நாயகியையும் கொண்ட கதை.

ஆ) கதையை நாட்டிய நாடகமாக்கி நடத்துமிடத்து, அதிலே தொய்வு இன்றி, பார்வையாளர்களுக்குச் சலிப் பேற்படாவகையிலே நடத்திச் சென்றமை.

இ) உணர்வுகளைப் புலப்படுத்தப் பொருத்தமான ஜதிகளையும், நடைகளையும், பாடல்களையும் கையாண்டமை.

இந்நாட்டிய நாடகத்திலே காணப்பட்ட ஒரு குறைபாட்டினையும் இங்கு சுட்டுதல் இன்றியமையாததாகும். அதாவது, பாடல்களைப் பாடியவர்கள் அப்பாடல்களின் பொருள்தெளிவாகப் பார்வையாளர்களால் விளங்கிக்கொள்ளத்தக்க வகையிலே பாடியிருக்கலாம். சில சந்தர்ப்பங்களில் சில சொற்கள் தெளிவாக உச்சரிக்கப்படவில்லை. இது தீர்த்து வைக்கக் கூடிய குறைபாடு. ஒட்டு மொத்தமாக நோக்கின், 'சீதன அம்புகள்' ஒரு நல்ல கலைப் படைப்பு; மக்கள் பண்பும் மக்கள் பணியுமுடைய ஒரு நாட்டிய நாடகம்.

கல்வியையும் புங்குடுதீவு புனித சவேரியார் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் பெற்றுக் கொண்டார். 1950-ல் அடிகளாரின் பெற்றோர் மன்னார் மாவட்டம் செட்டிகுளத்தில் அமைந்துள்ள முகத்தன்குளம் குடியேற்றத் திட்டத்தில் குடியமர்ந்தார்கள். குடும்பம் வருவாய் தேடி இடம் பெயர்ந்து வசிக்கச் சென்றபோதும் சிறுவனான யோசவ் 1954 வரை தமது கல்வியைத் தொடர்வதற்காக நெடுந்தீவில் தங்கியிருந்தார். பின்பு முருங்கன் றோ. க. பாடசாலையிலும், விடுதியிலும் அவருக்கு இடம் கிடைத்தது.

1955 ஜனவரி 04 ஆம் திகதி யோசவ் புனித மாட்டீனார் சிறிய குருமடத்தில் சேர்ந்து பிதா ரி. ஏ. ஜே.மதுரநாயகம் அவர்களால் உருவாக்கப்படலானார். புனித பற்றிக்ஸ் கல்லூரியில் தமது கல்வியைத் தொடர்ந்து கற்றார்.

1960 இல் அம்பிட்டியா குருமடத்துக்கு அனுப்பப்பட்டு அங்கு மெய்யியல் கல்வியை முடித்துக் கொண்டு திருச்சி புனித சின்னப்பர் குருமடத்தில் இறையியல் கற்பதற்காக ஆயரால் தமிழ்நாட்டிற்கு அனுப்பப்பட்டார். 1967 டிசம்பர் 13 ஆம் திகதி யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் ஆயர் எமிலியானுப்பிள்ளை அவர்களால் திருநிலைப்படுத்தப்பட்டு யாழ்ப்பாணம், மன்னார், முருங்கன் பகுதிகளில் பங்குத் தந்தையாகவும், துணைப் பங்குத் தந்தையாகவும் கடமையாற்றியுள்ளார்.

1984 இல் ஊர்பான் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றார் இலங்கை திரும்பியதும் புனித பிரான்சிஸ் சேவியர் குருத்துவக் கல்லூரியில் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.

கிறிஸ்துவைப் பின்பற்றி அவருக்குப் பணிசெய்ய அர்த்தமுள்ள விதத்தில் அடிகளார் தம்மை அர்ப்பணித்து வருகிறார்.

# விழிப்பு

## சிறுகதை

''அக்கா தலை இழுத்து விடுங்சோ''

என்றவாறு வந்து நின்ற சின்னத தங்கையை ஒரு வித யோசனையுடன் அதே நேரம் மனதில் ஒரு பெருமிதமும் பாச உணர்வும் இழையோடப் பார்க்கிறேன். பாடசாலை செல்வதற்கு என உடுப்புப் போட்டு தலை இழுப்பதற்கென சீப்புடன் வந்து நிற்கிறள் முகத்தில் ஒரு சிரிப்பு அது எந்த நேரமும் மாறாதது. நேற்றும் கூட இப்படித் தான் தலை இழுத்து விடும்படி சேட்டுக் கொண்டு வந்தவளை எனக்கிருந்த வேலைகளின் சுமையாலும் மனதில் புகைந்து கொண்டிருந்த ஏதோ ஒரு எரிச்சல் காரணமாகவும்,

''உனக்கு இப்ப 12 வயதாகிறது. இன்னமும் தலை இழுக்கத் தெரியேல்லை. உன்ரை வயசில நான் வீட்டுப் பொறுப்பையே கவனிக்கத் தொடங்கி விட்டன். நீ என்னடா என்றால் ஒரு வீடு கூட டுற அலுவல் கூட ஒழுங்காகச் செய்யத் தெரியாம நிற்கிறாய். நான் சொல்லிப் போட்டன். இண்டைக்கு மட்டும் நான் இழுத்து விடுவன் இனிமேல் நீதான் இழுக்க வேணும். இப்ப பழகாமல் இருநதால் பிறகு எப்ப பழக்கிறது ''

என்று மனதில், வாயில் வந்தபடியெல்லாம் ஏசினேன். அவள் பதிலொன்றுமே சொல்லவில்லை. முகத்தில் இருந்த சிரிப்புக் கூட மாறாமல் அப்படியே இருந்தது. அவள் முகத்தைப் பார்த்த பின் மேலும் ஏசவும் மனம் வரவில்லை பேசாமல் விட்டு விட்டேன். இன்று காலையில் திரும்பவும் வந்து நிற்கிறாள்.

''அக்கா தலை இழுத்து விடுங்கோ''

என்று. ஏசவும் மனம் வரவில்லை. சின்னவள் தானே! வளர வளர சரியாகி விடும் என்று நினைத்தபடியே தலையை வாரி விட்டேன்.

''போட்டு வாறனக்கா''

என்றவாறு புறப்பட்டுப் போனாள்.

அன்று ஒருநாள்!...

அப்படித்தான் பொழுது விடிந்தது. எப்போதாவது மாதம் ஒரு முறை இரு முறை வெடியோசைகளுடன் பொழுது எங்களுக்கு விடிவதுண்டு. அன்றும் அப்படித் தான் வெடியோசைகளுடன் பொழுது விடிந்தது. மக்கள் பரபரப்புற்றுத் திரிந்தனர். குருவிகள் காகங்கள் எல்லாம் பயத்துடன் மரங்களை விட்டுப் பறந்தன. கரையோரப் பிரதேச மக்கள் இடம் பெயரத் தொடங்கினர். மூடை முடிச்சுகள் குழந்தை குட்டிகள் சகிதம் எங்கள் தெரு வழியே சாரி சாரியாய் நகர்ந்து கொண்டிருந்தனர்.

எங்களது வீட்டிற்கும் உறவினர்கள் சிலர் இடம் பெயர்ந்து வந்திருந்தனர். இதுவும் வழமையான நிகழ்வு தான். எல்லோருக்கும் சாப்பாடு சமையல் என்று வீடே அல்லோலகல்லோலப்பட்டது

''சுகந்தி'' சமையலறையில் இருந்து அம்மா, தங்கையை அழைக்கும் குரல். ஏதோ உதவி தேவை போலும். இரண்டு, மூன்று தடவைகள் கூப்பிட்டு அலுத்த அம்மா அவள் இல்லாமலேயே அலுவலை முடித்து விட்டார் என்று நினைத்தேன். ஏனெனில் பின்னர் அம்மா சுகந்தியை கூப்பிடவில்லை.

''என்ன இது? இப்படியா பிள்ளை வளர்ப்பது எல்லாம் நீங்கள் கொடுக்கிற இடம்...''

வந்திருந்த உறவினர் ஒருவரின் கருத்து என் காதில் விழுந்சது அம்மா பதிலொன்றும் பேசவில்லை. அம்மா எப்போதுமே இப்படித்தான். யாருக்கும் எதுவும் சொல்ல மாட்டார். கருத்து உண்மை போல இருந்த போதிலும் என்னால் வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளமுடியவில்லை.

''அவள் என்ன சின்னப் பிள்ளை தானே! நான் இருக்கிறன் தானே அலுவல் செய்ய பிறகு ஆறுதலா அவள் பழகட்டுமன்...''

என்றேன். எனது பதில் வந்திருந்த உறவினருக்குப் பிடிக்காது என்பது தெரிந்திருந்த போதிலும் இவ்வாறு கூறி விட்டு அவ்விடம் விட்டு அகன்றேன்.

சுகந்தி கூப்பிடக் கூப்பிட வராமல் என்னதான் செய்கிறாள் என்று பார்க்க வேண்டும் என்பதே அப்போதைய எனது முதலாவது ஆவலாக இருந்தது. வெளியில் கூடத்தில் அவளைக் காணவில்லை. அறையினுள் எட்டிப் பார்த்தேன் எதையோ மும்முரமாகப் படிப்பதில் ஆழ்ந்து போயிருந்தாள். என்னவோ பரீட்சையாக்கும் என்று நினைத்தபடி கிட்டத்தில் சென்று எட்டிப் பார்த்தேன்.

அது 'உணர்வு' என்ற சஞ்சிகை 88. 89 இல் வெளிவந்து கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் ஏடு அது. சற்றே கோபம் தலை தூக்கினாலும் சரி படிக்கட்டும் என்று எதுவும் பேசாமல் வந்து விட்டேன். ஏனெனில் வந்திருப்பவர்கள் இதற்கும் அவளைக் குறை கூறக்கூடாதல்லவா...? ஆனால் சற்று நேரத்திற்குள்ளாகவே அவள் பிரயோசன மற்ற வேலை பார்க்கிறாள். புத்தகம் படிக்கிறாள் என்பது கண்டு (?) பிடிக்கப்பட்டு அதற்கும் ஒரு முணு முணுப்பு கிளம்பி அடங்கியது. எனக்கோ நல்ல கோபம்.

''சுகந்தி!'' என்று கூப்பிட்டு 'இனிப் படிக்காதே' என்று ஏசினேன். அட்போதும் சிரித்தபடிபேசாமல்போனாள்.

ஒருநாட் காலை ஏதோ அலுவலாக இருந்தபோது ''அன்பார்ந்த தமிழீழ மக்களே!... ''

என்ற ஒலி பெருக்கி அழைப்பு காதிலே விழுந்தது கடற் கரும்புலிகள் காந்தரூபன், கொலின்ஸ், வினோத் இவர் [illegible] கூட்டம் இன்று மாலை நடைபெறும் என்பதே அதன் சாரம். எட்டு நாட்களுக்கு முன்னர் தான் கடலிலே ஒரு காவியம் முதலாவது கடற்கரும்புலித் தாக்குதல் நடந்து முடிந்திருந்தது.

அன்று தொட்டு ஆயிரம் கேள்விகள் சுகந்தியின் சின்ன மனதில்.

''ஏன் அக்கா அப்படி? ஏன் அக்கா இப்படி? ''

என்று விதம் விதமாகக் கேள்விகள் கேட்டு விளக்கங்கள் பெற்றாள்.

''அக்கா! கடலில் போகும்

### தூயவள்

போது சத்தம் கேட்காதா? சத்தமில்லாத 'போட்'டிலா போனார்கள்? அவர்கள் இறுதிக்கணத்தில் என்ன நினைத்திருப்பார்கள்? ''

இதெல்லாம் அவளது சந்தேகங்கள். வீட்டில் பெரிய கஷ்டப்பட்டு பயந்து நடுங்கி அனுமதி எடுத்து கூட்டம் பார்க்க நானும் தங்கையும் புறப்பட்டோம். அங்கேயும் இது யார் அது யார் என்று கேள்விகள் கேட்டுத் துளைத்தெடுத்து விட்டாள். பின்னர் கொஞ்ச நட்களுக்கு அந்தக் கூட்டம் பற்றிய கதைதான் அவள் வாயில்.

அதுவும் செங்கதிர் அண்ணா உரையாற்றி முடிக்கும் போது இறுதியில் கூறி முடித்த வசனங்கள் வாழ்க தமிழ் மலர்க தமிழீழம் எல்லாம் அடிக்கடி அவள் கதைகளில் வந்து போயின. அதற்கும் சேர்த்து நான் நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டேன். நான் தான் அவளை கூட்டம் அப்படி இப்படி என்று கூட்டித் திரிந்து பழக்குவ நாக,

இப்படியே நாட்கள் நகர்ந்தன நான் கதை கவிதை என்ற பெயரில் கொஞ்சம் கிறுக்குவது வழக்கம். அதையெல்லாம் எடுத்துப் படிப்பாள். போராட்டம் தொடர்பாக நான் எழுதியிருந்ததைப்பார்த்துவிட்டுஎன்னிடம்


''அக்கா இயக்கத்திற்குப் போனா என்ன? .. ''

என்று கேட்டாள் ஒரு நிமிடம் அயர்ந்து தான் போனேன் பின் சற்று சிந்தனை செய்துவிட்டு

''போகலாந்தான் ஆனால் போராட்டம் என்றால் என்ன? போராட்ட வாழ்க்கை என்பது எப்படி இருக்கும் என்ற முழுமையான தெளிவோடு தான்போக முற்பட வேணும் ஒன்றுக்கு நூறு தடவை சிந்தித்து விட்டுத் தான் புறப்பட வேணும் போன பின்னர் திரும்ப வருவது என்ற கதைக்கே இடம் இருக்கக் கூடாது ''

இப்படிப் பல மாதிரியெல்லாம் கூறினேன் அதுதான் நான் போக முற்படவில்லை என்று மனதினுள் ஒருசாட்டு கூறிக்கொண்டேன். நாட்கள் நகர்ந்தன திடீரென வெளி ஊரில் நின்ற எனக்கு ஒரு செய்தி வந்தது சுகந்தி இயக்கத்துக்குப் போய்விட்டாள் என்று ஒரு கணம் அதிர்ந்து பின் தெளிந்தேன்

''ஓ ! பதின் நான்கு நிரம்பாத எனது சின்னத் தங்கை ... பொறுப்பற்றவள் என்று எல்லோரும் கணக்குப் போட்டிருந்த என் தங்கை... அக்கா அக்கா என்று என்னையே சுற்றி வந்தவள் ... இன்று தாய் நாட்டின் துயர் அறிந்து தன் பொறுப்பு உணர்ந்து புறப்பட்டு விட்டாள்! ......''




# விடுதலைப் புலிகளின் ஆற்றலை இராணுவம் ஒரு போதும் பெறமுடியாது

வடக்கு கிழக்கு யுத்தத்தில் சிறிலங்கா அரசு மிகவும் பின்னடைவையும், தடுமாற்றத்தையும் கண்டுள்ளதை மிகவும் தெளிவாகக் காண முடிகிறது இவ் யுத்தத்தில் தற்பொழுது நாளாந்தம் சராசரி எட்டு இராணுவ வீரர்கள் உயிரிழக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளதுடன் இராணுவத்தை

கைப் பார்த்து குண்டு போடும் போது புலிகளின்எதிர்த்தாக்குதலுக்கு விமானம் இலக்காகக் கூடும். அவ்வாறு எதிர்த் தாக்குதலுக்கு இலக்காகாது தாக்குதலை நடத்துவதாயின் மிக உயரத்திலிருந்து குண்டுகளை வீசவேண்டும். அவ்வாறு வீசும்போது இலக்கைப் பார்த்து குண்டு வீசமுடியாது.

ஆகாய விமான தாக்குதல்

> "விடுதலைப் புலிகள் ஓரிடத்தில் மட்டுமல்ல இலங்கை முழுவதிலும் நின்று சண்டை பிடிக்கக்கூடிய பலமுள்ளவர்கள். அவர்களின் பலத்தை நாம் ஒரு போதும் பெறமுடியாது'' என்கிறார் சிங்கள முன்னணி அரசியல் விமர்சகரான காலிங்ககே. 18-10-92 ஆம் திகதி ராவய பத்திரிகையில் அவர் எழுதிய கட்டுரையை இங்கே தருகிறோம்.

விட்டு ஓடுபவர்களின் எண்ணிக்கையும் இரட்டிப்பாகியுள்ளது. கடந்த ஆகஸ்ட் 8இல் இராணுவ உயர் அதிகாரிகள் ஒன்பது பேரின் உயிரிழப்பைத் தொடர்ந்து இந்

கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது மணல், சதுப்பு நிலங்களில் செலுத்தக் கூடிய யுத்த தாங்கிகளும் ஏனைய யுத்த தாங்கிகளும் தேவை இவற்றை மிக உயர்

பாடுகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது பதவி உயர்வுகள் வழங்கும் போது அது அதிகாரிகளின் அறிந்த தெரிந்தவர்களுக்கே வழங்கப்படுகிறது. இது போன்ற முறைகேடான நடவடிக்கைகள்இராணுவத்தினரின்மனோ நிலையைபபெரிதும் பாதித்துள்ளது. யுத்தத்தைப்பற்றி அனுபவமும் திறமையும் உள்ளவர்கள் பல்வேறு காரணங்களை முன்னிட்டு ஓய்வுபெறுவதால் படை அணிகளை வடிவமைத்து யுத்தத்தில் ஈடுபடுத்த முடியாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.

கூட்டுப்படைத்தலைமையகம் குறிப்பிட்ட காலத்தில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளுடன் பிரதான தொடர்பைக்கொண்டிருந்தது

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல்ஹமில்ரன் வணசிங்காவை ஜே.ஓ.சி பொறுப்பாளராக நியமித்தது அங்கு இருந்த உயர் அதிகாரிகளுக்கு சற்று அவமதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனை இன்று அரசியல் வாதிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள் கின்றனர்.

# இராணுவத் தலைமைப் பீடத்தில் பதவி வெற்றிடங்கள்

80,000 பேர்களைக் கொண்ட சிறிலங்கா இராணுவ தலைமைப் பீடத்தில் இன்று பெரும் கருத்து முரண்பாடுகள் மட்டுமல்ல, நிரப்பப் படாத பல உயர் பதவி வெற்றிடங்களும் காணப்படுகின்றன. விடுதலைப் புலிகளின் தாக்குதலினால், தனியாக இராணுவத்தினரின் யுத்த



ஹமில்டன் வணசிங்கா

தந்திரோபாயங்கள் மட்டுமல்ல, இராணுவத்தின் கட்டமைப்பே குழம்பிப் போயுள்ளது இதன் விளைவாக சிறிலங்கா இராணுவத்தினுள் என்றுமில்லாத நெருக்கடிகள் தலைதூக்கியுள்ளதெனவும் கொள்ளலாம்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 18 ஆம் திகதி இரண்டாவது தடவையாக கூட்டுப்படைத் தலைமையகம் உருவாக்கப்பட முன்னர் சிறிலங்கா இராணுவத்தில் லெப். ஜெனரல் தரத்தில் ஒரு தளபதியும், மேஜர் ஜெனரல் தரத்தில் ஐந்து தளபதிகளையும் கொண்டதாக சிறிலங்கா இராணுவம் இருந்தது. அப்பொழுது லெப். ஜெனரலாக இருந்த ஹமில்ரன் வணசிங்கா தனது பதவிக் காலம் முடிவுறும் நிலையில் இருந்தார் அப்போது இராணுவத் தளபதி பதவியை ஹமில்ரன்வண சிங்கா வகித்து வந்தார் மேஜர் ஜெனரல்களாக சிசில் வைத்தியரெட்ணா, ஸ்ரான்லி - டீ.சில்வா, பாலரெட்ணராஜா டென்சில்கொப்பேகடுவ, ஜெரி டீ.சில்வா ஆகியோர் இருந்தனர்.

அன்று இராணுவ உயர் அதிகாரிகள் ஒரே தரத்தில் மூன்று வருடங்களுக்கு மேல் பதவி வகிக்க முடியாது. ஓய்வு பெறவேண்டும் என்ற விதிமுறை கடைப்பிடிக்கப்பட்டிருக்குமானால், கடந்த நவம்பர் மாதத்திலேயே லெப். ஜெனரலாக இருந்த ஹமில்ரன் வணசிங்காவும், மேஜர் ஜெனரலாக இருந்த சிசில் வைத்திய

த்தா என்ற பதவியும்வழங்கப்பட்டது. இந்நிலையில்இவ்வருட ஆரம்பத்தில்சிறிலங்கா இராணுவ அமைப்பு ஒரு ஜெனரலையும் ஒரு லெப் ஜெனரலையும் நான்கு மேஜர் ஜெனரல்களையும் கொண்டதாக இருந்தது.

இதேவேளை, வழமையான இராணுவ சட்டதிட்டங்கள் - கால நீடிப்புக்களின்றி - கடைப்பிடிக்கப்படுமாக இருந்தால் இவ்வருட இறுதிக்குள் நான்கு மேஜர் ஜெனரல்களினதும் பதவிக் காலமும் முடிவுற்று அவர்கள் ஓய்வுபெற வேண்டியநிலையே காணப்பட்டது இதன் பிரகாரம் மேஜர் ஜெனரல் ஸ்ரான்லி டீ. சில்வாவும் மேஜர் ஜெனரல் பாலரெட்ணராஜாவும் இவ்வருட மத்தியிலும் மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவும் மேஜர் ஜெனரல் ஜெரி சில்வாவும் இவ்வருட இறுதியில் ஓய்வு பெறவேண்டியநிலையிலும் இருந்தனர்

ஆனால், இராணுவ அதிகாரிகளின் வயதின் அடிப்படையிலும் (55 கீழ் ஆயின்), திறமை அனுபவம் என்பனவற்றின் அடிப்படையிலும்' அவர்களின் சேவைக்காலத்தை தீர்மானிக்க கூடிய அதிகாரத்தை ஜனாபதி கொண்டிருந்திருந்தார் எவ்வாறு இருப்பினும் இவ்வருடத்தின் மத்தியில் மேஜர் ஜெனரல் ஸ்ரான்லி டீ சில்வாவும் (உடல் நலக்குறைவு) தொண்டர்படையின் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் பாலரெட்ணராஜாவும் (தமிழர் என்பதினால்) ஓய்வு பெறவேண்டிய நிலைமை இருந்தது. இதேவேளை இவ்வருட இறுதியில் மீதமுள்ள இரண்டு மேஜர் ஜெனரல்களான டென்சில் கொப்பேகடுவ மேஜர். ஜெனரல் ஜெரி சில்வா ஆகியோரில் ஒருவர் பதவிவிலக வேண்டிய நிலையும் உருவாகியிருந்தது- இதில் அநேகமாக மேஜர். ஜெனரல் ஜெரி சில்வா பதவி விலக்கத்திற்கான நிலைமை காணப்பட்டது- ஏனெனில் மேஜர். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ பிரதம இராணுவ அதிகாரியாக மேஜர். ஜெனரல் பாலரெட்ணராஜாவிற்கு அடுத்ததாக பதவி ஏற்க இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில் மேஜர் ஜெனரல் பதவிகளில் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு சில மூத்த பிரிகேடியர்களின் பெயர்கள் அடிபட்டன- இதில் முன்னாள் யாழ்- மாவட்ட இராணுவத்தளபதி பிரிகேடியர் விஜய விமலரெட்னா, கூட்டுப்படை தலைமையகத்தில்' தலைமையதிகாரியாக (Principl Staff officer)இருக்கும் பிரிகேடியர் அசோக ஜெயவர்த்தனா, தற்போதைய கிழக்குப்பிராந்தியத்தளபதி பிரிகேடியர்லக்கி அலுகம ஆகியோரிடைய பெயர்களே பிரஸ்தாபிக்கப்பட்டன.

ஆனால் ஆகஸ்ட் மாதம் எட்டாம் திகதி அராலிப் பகுதியில் நிகழ்ந்த

யாக உருவாவதற்குரிய வாய்ப்பு பெருமளவில் இல்லை என்றே கூறலாம். எவ்வாறெனில், இவ்வருட இறுதியில், மேற்கொள்ளப்படும் மாற்றத்துடன், ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் ஸ்ரான்லி டீ.சில்வா, மேஜர் ஜெனரல் பாலரெட்னராஜா ஆகியோரது இடங்களுக்கு பிரிகேடியர் விஜய விமலரெட்னாவும், வேறு ஒருவரும்



சிசில் வைத்தியரட்ணா

நியமிக்கப்பட்டிருக்க கூடிய வாய்ப்பு இருந்தது. இதன்மூலம், வடக்கு, கிழக்குப் பகுதிக்கு புதிய மேஜர் ஜெனரல் பதவி ஏற்றிருக்க கூடியவாய்ப்புக்களும் ஏற்பட்டிருக்கும்.

ஆனால், தற்பொழுதுஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல்களினதும், கொல்லப்பட்ட மேஜர்ஜெனரலின் பதவிகளுக்கு மூத்த பிரிகேடியர்களை நியமிப்பதன் மூலம் நிரப்புவதில் இராணுவத் தளபதிக்கும், கூட்டுப்படை நடவடிக்கை தலைமைத் தளபதிக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் நிலவுவதாகப் பாதுகாப்பு வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. மூத்த பிரிகேடியர்களில் ஒருவரான லக்கி அலுகம, இராணுவத் தளபதியின் நெருங்கிய சகாவாகும். இவர் ஜே. வி.பி காலத்தில் லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்ணாவின் உதவியாளராகப் பணிபுரிந்தவராகும். மற்றொரு மூத்த பிரிகேடியரான அசோக ஜெயவர்த்தனா ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவின் நெருங்கிய சகாவாகும். நீண்டகாலமாகக் கூட்டுப்படைத்தலைமையகத்தில் ஹமில்டன் வணசிங்காவிற்குக் கீழ்கடமையாற்றியவராகும்.

இவ்விரு பிரிகேடியர்களினதும் பெயர்களும் பதவி உயர்வு, புதிய நியமனம் போன்றவற்றிற்கு பாதுகாப்பு வட்டாரங்களில் பிரஸ்தாபிக்கப்பட்ட போதும் தளபதிகளுக்கு இடையில் இருந்த முரண்பாடுகள் இப்பதவி உயர்வுகளுக்கு தடையாக இருந்தன. இந்நிலையில்,

இருவார சர்ச்சையின் பின் வழங்கப்பட்டுள்ள புதிய நியமனங்கள் இராணுவத்தில்உள்ளபதவிவெற்றிடங்களை நிரப்பவில்லை. அதாவது வட

வேண்டிய நிலை உருவாகி யுள்ளதுடன் இராணுவத்தை

> "விடுதலைப் புலிகள் ஓரிடத்தில் மட்டுமல்ல இலங்கை முழுவதிலும் நின்று சண்டை பிடிக்கக்கூடிய பலமுள்ளவர்கள். அவர்களின் பலத்தை நாம் ஒரு போதும் பெறமுடியாது" என்கிறார் சிங்கள முன்னணி அரசியல் விமர்சகரான காலிங்கசே. 18-10-92 ஆம் திகதி ராவய பத்திரிகையில் அவர் எழுதிய கட்டுரையை இங்கே தருகிறோம்.

விட்டு ஓடுபவர்களின் எண்ணிக்கையும் இரட்டிப்பாகியுள்ளது. கடந்த ஆகஸ்ட் 8இல் இராணுவ உயர் அதிகாரிகள் ஒன்பது பேரின் உயிரிழப்பைத் தொடர்ந்து இந்நிலை ஏற்பட்டுள்ளது இவ் அதிகாரிகளின் உயிரிழப்பின் பின்னரீ மட்டும் ஓடிய இராணுவத்தினரின் எண்ணிக்கை 875ஆக வுள்ளது இதுவரை காலமும் இராணுவத்தினர் மட்டுமே ஓடினர். ஆனால் தற்போது கடற்படையினரும் ஓடத் தொடங்கியுள்ளனர்.

ஆகஸ்ட் எட்டில் ஏற்பட்ட ஒன்பது இராணுவ, கடற்படை உயர் அதிகாரிகளின் உயிரிழப்பைத் தொடர்ந்தே இந்நிலை உருவாகியுள்ளது. தற்போது இராணுவத்தில் உயிரிழந்தவர்களின் இடத்தை நிரப்புவதற்கு புதியவர்களைத் திரட்ட முடியாத நிலை அரசிற்கு ஏற்பட்டுள்ளது.

இராணுவ உயர்அதிகாரிகளின் இழப்பு வடக்கு—கிழக்கு யுத்தத்தின் அடித்தளத்தையே அதிரவைத்துள்ளது. தொடர்ந்து இராணுவத்தினரைக் கொண்டு செலுத்த முடியாத ஒரு நிலையில் தற்போது தலைவர்கள் தள்ளாடுகின்றார்கள். அத்துடன் அதிகாரிகள் மத்தியிலும், சிப்பாய்களிடமும் மனத்தளர்வு காணப்படுகிறது.

அரசுடன் ஏனைய தமிழ்க் குழுக்கள் இருந்த போதும் மக்கள் புலிகளுடன் இணைந்து இருப்பதால் புலிகளை வெற்றி

> "அரசுடன் ஏனைய தமிழ்க் குழுக்கள் இணைந்திருந்த போதிலும் மக்கள் புலிகளுடன் இணைந்திருப்பதால் புலிகளை வெற்றி கொள்வதோ அன்றி அழிப்பதோ கடினமானதாகும்"

கொள்வதோ அல்லது அழிப்பதோ கடினமாகும். மேலும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தில் போதிய யுத்த தளபாடங்கள் இன்மை இராணுவத்தினர் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினையாகவுள்ளது. இராணுவ நடவடிக்கையினபோது விமான'படையின் உதவி அவசியமாகியுள்ளது.ஆனால் அந்த நேரத்தில் விமானம் மூலம் உதவிகள் வழங்க முடியாத நிலையில் விமானப்படை உள்ளது அதே வேளை சரியான இலக்

த்து குண்டு வீசமுடியாது. ஆகாய விமான தாக்குதல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது மணல், சதுப்பு நிலங்களில் செலுத்தக் கூடிய யுத்த தாங்கிகளும் ஏனைய யுத்த தாங்கிகளும் தேவை இவற்றை மிக உயர்ந்த விலை கொடுத்து வேண்ட வேண்டியுள்ளது. அவ்வாறு வாங்கி அரசு இவற்றை பயன்படுத்தும்போது அவை புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகி சேதமாக்கப்படுகின்றன. இவ் இழப்புகளினால் இராணுவச்செலவு பன்மடங்கு அதிகரித்துக் காணப்படுகிறது யுத்தம்

> "யுத்தம் நடைபெறும்போது விட்டுக்கொடுத்து விட்டு' பின்னர் தமக்குச் சாதகமான இடத்தில் வைத்துப் புலிகள் தாக்குகின்றனர். புலிகளின் இவ் யுத்த தந்திரோபாயத்தால் உயர் அதிகாரிகள் உட்பட சிப்பாய்கள் மத்தியிலும் பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது"

நடைபெறும் போது விட்டுக் கொடுத்துவிட்டுபின்னர் தமக்கு சாதகமான இடத்தில் வைத்துப்புலிகள் தாக்குகின்றனர் புலிகளின் இவ் யுத்த தந்திரோபாயத்தினால் உயர் அதிகாரிகள் உட்பட சிப்பாய்கள் மத்தியிலும் பெரும் அச்சம் ஏற்படுத்தியுள்ளதை காணமுடிகிறது

இதனால் யுத்தத்தில் முன்னேறிச்செல்லும் இராணுவத்தினர் ஒருகட்டத்தில் அச்சம் கொண்டுபின்வாங்கவேண்டிய ஓர் இக்கட்டான நிலைக்கு புலிகளின் இவ்யுத்த தந்திரம் தள்ளியுள்ளது. இப்படியான

நிலைக்கு இராணுவம் தள்ளப்பட்டுள்ளதால் புலிகள் மிகவும் துல்லியமாகவும்விரைவாகவும் தமது வெற்றியை ஈட்டக்கூடியதாக உள்ளது.

யுத்த நடவடிக்கையின் போது முப்படைகளிடையேயும்இராணுவஅதிகாரிகளிடையேயும் பொதுவான ஒத்துழைப்பு இல்லாமையை மிகவும் தெளிவாகக் காணமுடிகிறது. அரசிடமும் அரசியல் தலைவர்களிடமும் இராணுவ உயர் அதிகாரிகளிடையேயும்கருத்து வேறுபாடுகள் அரசியல் வேறு

துள்ளது. யுத்தத்தைப்பற்றி அனுபவமும் திறமையும் உள்ளவர்கள் பல்வேறு காரணங்களை முன்னிட்டு ஓய்வுபெறுவதால் படை அணிகளை வடிவமைத்து யுத்தத்தில் ஈடுபடுத்த முடியாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.

கூட்டுப்படைத்தலைமையகம் குறிப்பிட்ட காலத்தில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளுடன் பிரதான தொடர்பைக்கொண்டிருந்தது

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல்ஹமிலரன் வணசிங்காவை ஜே.ஓ.சி பொறுப்பாளராக நியமித்தது அங்கு இருந்த உயர் அதிகாரிகளுக்கு சற்று அவமதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனை இன்று அரசியல் வாதிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

இப்படியான பிரச்சினைகளைக் கண்டும் காணாதது போல் இருக்காது இதனைப் பெரிது படுத்த இவர்கள் முயலுகின்றனர். மீண்டும் கூட்டுப் படைத் தலைமையகத்திடம் யுத்த நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது கூட்டுப்படைத் தலைமையின் கீழ் ஹமில்ரன் வணசிங்க ஏனைய இராணுவஉயர் அதிகாரிகளின் உதவியுடன் யுத்தத்தை முன்னெடுக்க முடியாது தடுமாறுகின்றனர்.இவர் தற்போது இராணுவதினரிடையே ஏற்பட்டுள்ள தொய்வை சீர்ப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் இதற்கு அங்குள்ள இரண்டு பிரதான அதிகாரிகளின் உதவி அவருக்கு அவசியமாக இருப்பது தெளிவாகின்றது,

இராணுவ மட்டத்தில் இப்படியான பலசிக்கல்கள் காணப்படுகின்ற அதேவேளை விடுதலைப்புலிகளுக்கு எதிராக போரிடுவதற்கு திறமையான திட்டத்தைத் தீட்டி தாக்குதல்களை நடாத்த வேண்டியுமுள்ளது.

இராணுவத்தினரின் தொய்வுகளை நீக்கி புலிகளுடனான யுத்தத்திற்கு தயார் படுத்துவது உடனடிச்சாத்தியமற்றது. விடுதலைப்புலிகளிடம் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் இருப்பதால் அவர்களுக்கு எதிரான வான் தாக்குதல்களைக் கூட சுதந்திரமாகச் செய்ய முடியாத நிலை விமானப்படைக்கு ஏற்பட்டுளளது 23எம். எம். ரக விமான எதிர்ப்பு ஆயுதம் மூன்று விடுதலைப் புலிகளிடம் இருப்பதாக அரசின் உளவுப் படை தெரிவிக்கின்றது விமானப் படையின் நடமாட்டம்

(2ஆம் பக்கம் பார்க்க)

காத்தில் ஒரு தளபதியும், மேஜர் ஜெனரல் தரத்தில் ஐந்து தளபதிகளையும் கொண்டதாக சிறிலங்கா இராணுவம் இருந்தது. அப்பொழுது லெப். ஜெனரலாக இருந்த ஹமில்ரன் வணசிங்கா தனது பதவிக்காலம் முடிவுறும் நிலையில் இருந்தார் அப்போது இராணுவத் தளபதி பதவியை ஹமில்ரன்வண சிங்கா வகித்து வந்தார் மேஜர் ஜெனரல்களாக சிசில் வைத்தியரெட்ணா, ஸ்ரான்லி - டீ.சில்வா, பாலரெட்ணா ராஜா டென்சில்கொப்பேகடுவ, ஜெரி டீ.சில்வா ஆகியோர் இருந்தனர்.

அன்று இராணுவ உயர் அதிகாரிகள் ஒரேதரத்தில் மூன்று வருடங்களுக்கு மேல் பதவி வகிக்க முடியாது. ஓய்வு பெறவேண்டும் என்ற விதிமுறை கடைப்பிடிக்கப்பட்டிருக்குமானால், கடந்த நவம்பர் மாதத்திலேயே லெப். ஜெனரலாக இருந்த ஹமில்ரன் வணசிங்காவும், மேஜர் ஜெனரலாக இருந்த சிசில் வைத்தியரெட்ணாவும் தமதுபதவிகளை துறந்திருக்கவேண்டும்.

ஆனால் லெப்.ஜெனரல் ஹமில்ரன் வணசிங்கா பதவிக்காலம் முடிவடைந்த வேளையில் மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா லெப் ஜெனரலாகப் பதவி உயர்வு பெற்றதோடு இராணுவத் தளபதியாகவும் பொறுப்பேற்றார் தரம் உயர்தல் மூலம் அவரது பதவிகாலம் நீடிக்கப்பட்டது. இதுவரை சில்வைத்தியரெட்னா வகித்து வந்த இராணுவ பிரதம அதிகாரிப் பதவி மேஜர் ஜெனரல் ஸ்ரான்லி சில்வாவிற்கு வழங்கப்பட்டது.

ஆனால் மீண்டும் முப்படைத் தலைமையகம் முப்படைகளின் பிரதமதளபதியானஜனாதிபதிபிரேமதாசாவால்உருவாக்கபபட் போதுமுன்னாள் ராணுவத் தளபதியாக இருந்த லெப் ஜெனரல் ஹமில்ரன் வணசிங்கா ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டு கூட்டுப் படை நடவடிக்கை தலைமைதளகர்

சில்வா பதவி வகிக்க... நிலைமை காணப்பட்டது- ஏனெனில் மேஜர். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ பிரதம இராணுவ அதிகாரியாக மேஜர். ஜெனரல் பாலரெட்னராஜாவிற்கு அடுத்ததாக பதவி ஏற்க இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில் மேஜர் ஜெனரல் பதவிகளில் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு சில மூத்த பிரிகேடியர்களின் பெயர்கள் அடிபட்டன- இதில் முன்னாள் யாழ்- மாவட்ட இராணுவத்தளபதி பிரிகேடியர் விஜய விமலரெட்னா, கூட்டுப்படை தலைமையகத்தில்' தலைமையதிகாரியாக (Principl Staff officer)இருக்கும் பிரிகேடியர் அசோகஜெயவர்த்தனா, தற்போதைய கிழக்குப்பிராந்தியத்தளபதி பிரிகேடியர்லக்கி அலுகம ஆகியோரிடைய பெயர்களே பிரஸ்தாபிக்கப்பட்டன.

ஆனால் ஆகஸ்ட் மாதம் எட்டாம் திகதி அராலிப் பகுதியில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேக்கடுவ, பிரிகேடியர் விஜய விமலரெட்னா கொல்லப்பட்டமையானது இராணுவ அதிகாரிகள் தரப்பில் உடன் நிரப்ப முடியாத வெற்றிடம் ஒன்றை ஏற்படுத்தியது. இக் கண்ணி வெடிச் சம்பவத்தால் சிறிலங்கா இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் இருந்த படி நிலை (Hierarchy) திடீரென உடைக்கப்பட்டது.

இதனை அண்மையில் வடக்கு - கிழக்குப் பிராந்தியங்களுக்குப் பொறுப்பாக பிரிகேடியர் தரத்திலுள்ள இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டதில் இருந்தே புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. அதாவது இதுவரை இரு மேஜர் ஜெனரல்கள் வகித்த பதவியானது இரு பிரிகேடியர்களால் நிரப்பப்பட்டுள்ளது.

அராலித் துறையில் இக் கண்ணி வெடிச்சம்பவம் நிகழாவிடில் இவ்வாறானதொரு நிலைமை சடுதி

சகாவாகும். இவர் ஜே.வி.பி. காலத்தில் லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்ணாவின் உதவியாளராகப் பணிபுரிந்தவராகும். மற்றொரு மூத்த பிரிகேடியரான அசோக ஜெயவர்த்தனா ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவின் நெருங்கிய சகாவாகும். நீண்டகாலமாகக் கூட்டுப்படைத்தலைமையகத்தில் ஹமில்டன் வணசிங்காவிற்குக் கீழ்கடமையாற்றியவராகும்.

இவ் விரு பிரிகேடியர்களினதும் பெயர்களும் பதவி உயர்வு, புதிய நியமனம் போன்றவற்றிற்கு பாதுகாப்பு வட்டாரங்களில் பிரஸ்தாபிக்கப்பட்ட போதும் தளபதிகளுக்கு இடையில் இருந்த முரண்பாடுகள் இப்பதவி உயர்வுகளுக்கு தடையாக இருந்தன. இந்நிலையில்,

இருவார சர்ச்சையின் பின் வழங்கப்பட்டுள்ள புதிய நியமனங்கள் இராணுவத்தில்உள்ளபதவிவெற்றிடங்களை நிரப்பவில்லை. அதாவது வடக்கு பிராந்தியத் தளபதியாக ஒரு பிரிகேடியர் நியமிக்கப்பட்டதும், யாழ். மாவட்டத் தளபதியாக இருந்து அதுவும் குறுகிய காலம் மாவட்டத் தளபதியாக இருந்து பிராந்தியத் தளபதியாக பதவி உயர்வு பெற்றுள்ளமையும், மூத்த பிரிகேடியர்களான லக்கி அலுகம, அசோக ஜெயவர்தனா போன்றோர் இப்பதவிக்கு நியமிக்கப் கப்படாமையும், ஏழு கேணல்கள் பிரிகேடியர்களாகப் பதவிஉயர்த்தப்பட்ட போதும் மூன்று மேஜர் ஜெனரல்களுக்கான பதவி வெற்றிடங்கள் இருந்தும் எந்தப் பிரிகேடியர்களும் பதவி உயர்த்தப்பட்டாமையும் சிறிலங்கா இராணுவத்தில் அராலிக் கண்ணிவெடிச் சம்பவம் ஏற்படுத்திய தாக்கத்தையும் இராணுவத் தலைமைப் பீடத்திலுள்ள முரண்பாடுகளையும் வெளிக்காட்டுவதாகவே உள்ளது.

**ஜெயராஜ்**

# இசை

வாய்ப்பாட்டுக்காரரர் - உச்சஸ்தாயியில் பாடியவர் பதிவுக் கருவிகளின் முன்னே குரலை அமுக்கிப் பாட வேண்டி நிர்ப்புந்தம் ஏற்படுகிறது. கிட்டப்பா பாகவதர் நாடக மேடையில் பாடிய பாடல்களையும் இன்றைய பாடங்களையும் அவதானித்தால் தொழில் நுட்ப வளர்ச்சியால் ஏற்பட்ட பாதிப்புத் தெரியும், மேலும் ஒரே மைக் முன்னால் பாடுவதால் பலவித இசைக் கருவிகளைப் பாவிக்க முடியாத நிலை ஏற்படுகிறது.

O மெல்லிய குரலில் பாடும் முறை (Crooning) தோன்றியது எவ்வாறு? தியாகராஜ பாகவதர், டி. கே. பட்டம்மாள், வசந்தகோகிலம் போன்றவர்களின் பாடல்களில் இசை எளிமையாக இருப்பதற்குக் காரணம் என்ன?

ஒலித்துறையில் அவ்வப்போது ஏற்பட்ட முன்னேற்றம் தான் இதற்கான காரணம். ஒலி வாங்கியின் முன் குரலைக் குறைத்துப் பாட வேண்டும் என்ற நிர்ப்பந்தம் தான் கருநாடக் இசை வல்லுநர்களையும் மெல்லிய குரலில் பாடத் தூண்டியது. சாஸ்த்ரீய ராகங்களை எளிமைப்படுத்திஇனிமை மாறாத முறையில் பாடல்களை எழுதியவர்தான் பாவநாசம் சிவன். தியாராஜ பாகவதர், பி.யு. சின்னப்பா, வசந்த கோகிலம், எம். எஸ். சுப்புலட்சுமி போன்ற சாஸ்த்ரீய இசை வல்லுநர்கள் கருநாடக ராக அடிப்படையில் (Light Melodies பாடினார்கள். இசைக்கருவிகளும் மிகக்குறைவாகவே பயன்படுத்தப்பட்டன. பாகவதரின் "மறைவாய்ப் புதைத்த ஓடு" (திருநீலகண்டர்), "அப்பனைப் பாடும் வாயால்" [சிவகவி] போன்ற பாடல்களில் இசை எளிமையாக இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும். பாகவதரின் அம்பிகாவதி படத்தில் உள்ள பாடல்களை இன்றும் கேட்கக் கூடியதாக இருப்பது ராகத்தின் இனிமையும், எளிமையும்தான். ராகங்கள் எமது மனதிற்கு இனிமையாகவும், செவிப்புலனுக்கு அமைவாகவும் இருக்க வேண்டும்.

O இளையராஜா இசையமைத்த பாடல்களில் Syntheizer என்ற மின்னணுக் கருவி பயன்படுத்தப்படுகிறது. இதனால் இசையின் கலாம்சம் பாதிக்கப்படுமா?

இது இன்றியமையாதது அல்ல. இந்தக் கருவி இல்லாமலேயே தரமான இசை மலரலாம். இளையராஜாவின் தளம் சினிமா. எமது தளம் வேறு. சினிமா இசைக்கும் சாதாரண இசைக்கும் எத்தனையோ வித்தியாசங்கள் உள்ளன. சினிமாவில் ஒலிக்குத் தரப்படும் முக்கியத்துவம் தற்காலிகமானது. திரைக்கதையின் ஓட்டத்திற்கேற்ப இசையும் அமைந்து அது ஒரு தனித்த பொழுது போக்காய் விடுகிறது. இசை சினிமாவில் ஒரு பொழுதுபோக்கு அளவிலேயே நின்று விடுகிறது. ஆனால் கருநாடக இசையின் தனித்துவம் மின்னணுக் கருவிகளால் பாதிக்கப்படாது. அது எந்தச் சூழலிலும் முழுமை பெற்றுத்திகழும்-


O மெல்லிசை பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

இசையின் இலட்சணம் முழுமையாயக் தெரிந்திருந்தால் மெல்லிசை அதன் ஓர் எல்லையில் உள்ளதாக இருக்கலாம். எமது கலாசார வாழ்வில் பணம் தேடும் அம்சமாக மெல்லிசை உள்ளது. மெல்லிசையில் ஆழமில்லை. கருநாடக இசையைப் பழக நாளெடுக்கும். மெல்லிசையை சங்கீத ஞானம் இல்லாதவர்களும் பாடலாம். குரல் வளமாக இருந்தாலும்,- குரல் பயிற்சி இல்லாமல் சாஸ்த்ரீய சங்கீதத்தைப் பாட முடியாது. யேசுதாஸ், மதுரை சோமு, எம். எஸ். எல்லாம் நீண்ட காலப் பயிற்சியின் பின்தான் பாடுகிறார்கள். மெல்லிசைக்குப் பெரும் பயிற்சிவேண்டியதில்லை. இரண்டு மூன்று பாடல்களை மனனம் செய்தால் போதும், மற்றவர்கள் பாடியது போல் பாடிவிடலாம். சாஸ்த்ரீய சங்கீதத்தில் மற்றவர்கள் பாடுவது போல் பாடமுடியாது. மற்றவர்களைப் போல் குரலைப் பாவனை செய்தால் தோல்வி

[6 ஆம் பக்கம் பார்க்க]

# ஈழநாதம்

## ஆனையிறவில் வீரச்சாவடைந்த 15 வீரவேங்கைகள்



கப். பாணன்



லெப். இன்பன்




லெப். இசைவாணன்



2ம் லெப். மதனராசா



2-ம் லெப். வேங்கை



2-ம் லெப். பிரதீபன்







## இன்றைய உதைபந்தாட்டம்

யாழ். மாவட்டபாடசாலைகளுக்கிடையேயான மாவட்ட ரீதியிலான உதை பந்தாட்ட போட்டிகளில் இன்று 17 வயது பிரிவுகளுக்கான மூன்று போட்டிகள் இடம்பெற உள்ளன.

கொக்குவில்இந்துக் கல்லூரி மைதானத்தில் மாலை 3-00 மணிக்கு புனித ஹென்றியா சவிர் எதிர் அச்சுவேலி மத்தியாலயம். 4-00 மணிக்குக நாவாந்துறை றோமன் கத்தோலிக்க எதிர் அராலிஇந்து

ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் மாலை 3-00 மணிக்கு உரும்பராய் இந்து எதிர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

### இசை

யாக முடியும். பாலமுரளி பத்து வயதில் தியாகராஜ உற்சவத்தில், தன் குரு பாடியவுடன், அதே பக்கவாத்தியத்துடன், அதே மேடையில் பாடியவர். அவர் தன் குருவின் குரலைப் பாவனை செய்யவில்லை. சுயமாகவே சிறு வயதிலும் பாடினார் ஆனால் சிலர் பாலமுரளியின் குரலைப் பாவனை செய்து பாடுகிறார்கள். இது நீண்ட காலம் நீடிக்காது.

O காரைக்குடியில் பிறந்த நீங்கள் யாழ்ப்பாணத்துடன் எப்படி உங்களைத் தொடர்பு படுத்திநீர்கள்?

மாவிட்டபுரத்தில் 1952-ல் திருமணம் செய்து கொண்டேன். 1954 இல் நிரந்தரமாகவே யாழ்ப்பாணம் வந்து விட்டேன். இடைப்பட்ட காலத்தில் 1957இல் எஸ். டி. சிவநாயகம் காலத்தில் சுதந்திரனில் நிர்வாகப் பணி எமக்குத் தரப்பட்டது. ஏலவே தினமணி, கலைமகள், மணிக்கொடி காரியாலயங்களில் விநியோகம், வெளியீட்டுப் பகுதிகளில் வேலை செய்த முன் அநுபவத்தால் என்னைச் சுதத்திரனில் வெளியீட்டுப் பகுதியில் நியமித்தார்கள். இலங்கைப் பிரசாவுரிமை கிடைத்ததும் 1959 ஜனவரியில் சங்கீத ஆசிரியர் வேலை கிடைத்தது. முதல் நியனம் திருக்கோணமலையில். ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் தொடர்ச்சியாகப் பத்தொன்பது வருட சேவை. 1984இல் இளைப்பாறினேன்.

### அழிவு

களை பொதுமக்களின் வீடுகளில் இருந்து பிடுங்கி எடுக்கப்பட்ட கதவுகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பெட்டிகளில் போட்டு பொதி செய்யப்பட்டு படையினரால் எடுத்துச் செல்லப்படுகின்றன.

பொதுமக்களின் பல வீடுகள் யுத்த டாங்கிகள் கொண்டு இடித்து தரைமட்டமாக்கப்பட்டிருக்கிறது சில வீடுகள் குண்டு வைத்து தகர்க்கப்பட்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் அழிவுக் கோலங்கள் ஆங்காங்கு சிதறிக் கிடக்கும் தளபாடங்களும் கூரைத்தகடுகளும், வெட்டி வீழ்த்தப்பட்ட மரங்களுமாக எங்கும் அழிவின் எச்சங்கள் காணப்படுகின்றன. வீட்டுக் கூரைத் தகடுகளையும் வீட்டு மரங்களையும் பாவித்து காவல் அரண்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார். (க)

### கொழும்பு

தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக தெரிவித்தார்

இதேவேளை வழக்கமான சகல நடவடிக்கைகளும் மக்கள் நடத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பில் சொல்லப்படுகிறது பிள்ளைகளைப் பள்ளிக் கூடத்துக்குக் கூட்டிச் செல்லும் பெற்றோரைத் தடுத்து நிறுத்த எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள்

இன்று ஜும்மா தொழுகைக்குப் பிறகு ஆர்ப்பாட்டங்கள் எதுவும் நடப்பதைத் தடுப்பதற்கு நாடெங்கிலுமுள்ள பள்ளி வாசல்களுக்கு அருகில் பொலிஸ் படைகளும் இராணுவமும் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

## 31-ம் நாள் நினைவு



### பௌதிகவியல் மீள்பரீட்சை

1992ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடை பெற்ற பௌதிகவியல் பகுதி II மீள் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் நேற்று கல்வித் திணைக்களத்திற்கு கிடைக்க பெற்றுள்ளன.

பாடசாலை பரீட்சார்த்திகளிற்கான அனுமதிஅட்டைகளை தத்தமது கோட்டக் கல்விப் பணிமனையிலிருந்து சேகரித்துபரீட்சார்த்திகளுக்கு விநியோகிக்கும்படி அதிபர்கள் கேட்டுகொள்ளப்படுவதாக பிரதேசக் கல்விபப்ணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

### அறிவியல் கழக ஆரம்பவிழா

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் அறிவியல் கழக ஆரம்ப விழா இன்று நண்பகல் 12.30 மணிக்கு கனகரட்ணம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆரம்ப விழாவினை கொத்தணி அதிபர் திரு. மு இராமலிங்கம் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

விழாவின் தொடக்கவுரையை அரசகுலசூரியர் நிகழ்த்தவுள்ளார் இதில் கலந்து கொள்ளுமாறுகல்விக்கோட்ட மாணவர் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

### யாழ் அகதி

கரவெட்டி உதவி அரசாங்க பிரிவில் இருநூற்றி ஐம்பத்தி எட்டு பேரும், பருத்தித்துறை மருதங்கேணி உதவி அரசாங்க பிரிவுகளில் இரு நூற்றி எண்பத்தைந்து பேரும் அங்கவீனராக்கப்பட்டுள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பாக ஏனைய உதவி அரசாங்க பிரிவுகளின் தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

### 15 வேங்கைகள்

சின்னத்தம்பி புஸ்பராஜா-கட்டையர்குளம், சாஸ்திரி கூழாங்குளம்.

வீரவேங்கை பாண்டியன் இராசு றமேஸ் - கொக்குவில் மேற்கு கொக்குவில்

வீரவேங்கை ஞானதாஸ் ஆகிய போராளிகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## தீபாவளி பரிசில்கள்

மாவீரன் வீரவேங்கை கஸ்ரோ (சோமசுந்தரம் கமலநாதன்) நினைவாக அவரது குடும்பத்தினர் சைவ வித்தியா விருத்திச் சங்க நிறை வாழ்வு இல்ல சிறார்களுக்கு தீபாவளிப் பரிசில்களை வழங்க முன்வந்துள்ளனர்.

சனிக்கிழமை மாலையில் நடைபெறும் ஆடம்பரமற்ற நிகழ்ச்சி ஒன்றில் இப் பரிசில்கள் வழங்கப்பட விருப்பதுடன், ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்க மண்டபத்தில் வீரவேங்கை கஸ்ரோ நினைவாக தீபாவளிக் கதம்பம் ஒன்றும், கலை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது.

### புலிகளுடன்

கம் அதனைத் தொடரலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்

ஆனால், இந்தப் பேச்சுவார்த்தைகள் இரகசியமாக நடத்தப்படக் கூடாது பேச்சுவார்த்தையின் முன்னேற்றம் பற்றி எதிர்க்கட்சிகளுக்குத் தகவல் தரப்பட வேண்டும் என்றும்,

நாம் இலங்கையின் 45 வீதமான மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றோம். அதனால் என்ன நடக்கிறது என்பதை அறிந்துகொள்ள எமக்குசுதந்திரம்உள்ளது என்றும் அவர் மேலும்குறிப்பிட்டார்

இலங்கை ஒரு மிகச்சிறிய நாடு. பெருமளவிலான மக்கள் மரணம் அடைவதை எம்மால் தாங்கிக் கொள்ள முடியாது என்றும் தனது பேட்டியில் தெரிவித்துக்கொண்டார்.

### மாதகலில்

லூரி மாணவன்) சு. சுரேந்திரன் (வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மாணவன்) ஆகிய இரு பாடசாலை மாணவர்களுமே விடுவிக்கப்பட்டவர்களாவர்.

இவர்கள் இருவரும் நடைபெறவுள்ள பரீட்சைக்கு தோற்று முகமாகவே விடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த இருவரும் நேற்றுக் காலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் குமண கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு அழைத்து வரப்பட்டு அங்கிருந்து அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (82)


## தேவை

சாராய வெற்றுப்போத்தல், (750 மில்லி) பெட்டி தேவை. வைத்திருப்பவர்கள் உடன் தொடர்புகொள்ளவும். விலை



2ம் லெப். மதனராசா



2-ம் லெப். வேங்கை



2-ம் லெப். பிரதீபன்



2-ம் லெப். குட்டிக்கண்ணா




2ம் லெப். தமிழரசன்



வீரவேங்கை காங்கேயன்



வீரவேங்கை தேவன்



வீரவேங்கை மாணிக்கவாசகன்



வீரவேங்கை முருகன்



வீரவேங்கை மலரவன்



வீரவேங்கை பாண்டியன்



வீரவேங்கை ஞானதாஸ்

தவரோதயாக் கல்லூரியில் தொடர்ச்சியாகப் பத்தொன் பது வருட சேவை. 1984இல் இளைப்பாறினேன்.

பொலிஸ் படைகளும் இரா ணுவமும் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கும் என தெரிவிக்கப் படுகிறது.

சின்னத்தம்பி புஸ்பராஜா-கட் டையர்குளம், சாஸ்திரி கூழா ங்குளம்.

வீரவேங்கை பாண்டியன் இராசு றமேஸ் - கொக்குவில் மேற்கு கொக்குவில்

வீரவேங்கை ஞானதாஸ்

ஆகிய போராளிகளுக்கு தமி ழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

பெறவுள்ள பரீட்சைக்கு தோற்று முகமாகவே விடுவிக் கப்பட்டதாக தெரிவிக்கப்படு கிறது.

இந்த இருவரும் நேற்றுக் காலை சர்வதேச செஞ்சிலு வைச் சங்கத்தினரால் குமண கப்பல் மூலம் பருத்தித்துறை க்கு அழைத்து வரப்பட்டு அங்கிருந்து அவர்களது சொந்த இடங்களுக்கு அனு ப்பி வைக்கப்பட்டனர். (82)


## 31-ம் நாள் நினைவு



அமரர்

### திருமதி பூமலர் ஐயாத்துரை

தோற்றம்: 12 4-1937

மறைவு: 23-9-1992

சித்திரையில் மலர்ந்திட்ட சிங்காரப் பூமலராய்
இத்தரையில் எழிலாக இன்பமுடன் வாழ்ந்திருந்து
புத்திரராய் எழுவர்தனைப் பூவா யளித்துவிட்டு
நித்திரையும் போன எங்கள் நித்திலமே வாராயோ

தாவடி

கணவர், மக்கள்,
குடும்பத்தினர்

(3512)

மீண்டும் யாழ். நகரில் அறிமுகம்

மிற்சுபிஷி வர்ண படச்சுருள்கள்

The Re Introducing at Jaffna

**Mitsubishi Colour Film Rolls**

★ குறைந்த சில்லலை விலை

★ ஸ்ருடியோக்கள்
வெளிப்புறப்படப்பிடிப்பாளர்கள்
ஆகியோருக்கு கவர்ச்சிகர விலை

★ மேலும் விசேட கழிவுகளை
மொத்த கொள்வனவில் பெற்றுக்கொள்ளலாம்.

கிடைக்குமிடம்:

**கலக்சி புகைப்பட சேவை**

1ஆம் மாடி
337, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(3510)

## தேவை

சாராய வெற்றுப்போத்தல், (750 மில்லி) பெட்டி தேவை. வைத்திருப்பவர் கள் உடன் தொடர்புகொள்ளவும். விலை பேசித் தீர்க்கப்படும்.

பொதுமுகாமையாளர்
வடமராட்சிக் கொத்தணி

திக்கம் வடிசாலை,
திக்கம்.

(3401)

சுவைத்து மகிழ்ந்திட



ரேஸ்ரியின்
புதிய தயாரிப்புக்கள்
KIDDIES SPECIAL
FRUIT CHOCOLATE

ஒவ்வொன்றினுள்ளும்
அழகிய ஸ்ரிக்கர்கள்

**TASTE LINE INDUSTRIES (PVT) Ltd,**
14, SEENIOR LANE,
JAFFNA.

(சி/5238)


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 22-10-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்; 6248

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்

26-4707, 24-5137, 26-6361, 27-2107, 28-248, 24-6846 41-5602, 26-375, 28-4672, 26-3032, 27-9825, 41-8035

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்

28-2511, 28-0429, 26-5873, 24-6437, 71-4984, 41-9757, 2-3628,


இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.